விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 132 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை (30.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று 1008 பானைகளில் விசேட பொங்கல் வழிபாடு இடம்பெற்றது.

## கடன் எடுக்க இடமும் இல்லை விற்பதற்கு பொருளும் இல்லை

### ஜே.வி.பி தெரிவிப்பு



(கொழும்பு)

இனிக் கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்கும் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை, மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கின்றது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி 23

## பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை விரைவில் மீட்டெடுக்க முடியும்

### பிரதமர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

ஐ.எம்.எப் ஊடாக சர்வதேசத்தின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை விரைவில் மீட்டெடுக்க முடியும் என பிரதமர் தினேஸ் குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழுவில் விபத்து; வயோதிபப் பெண் பலி

(கரணவாய்)

ஆலயத்துக்குச் சென்று விட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வயோதிப பெண் ஒருவரை வான் மோதித் தள்ளியதில் குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

இதில் உரும்பிராய் வடக்கு உரும்பிராயை சேர்ந்த கணநாயகம் உமாதேவி (வயது- 72) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த வயோதிபப் பெண் நேற்று 23

## கோப்பாய் பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியை காண்பித்து அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸாருக்கு வீதியில் வைத்து கிறீஸ் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திய இருவர் மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பித்துள்ளனர்.

உரும்பிராய் சந்தியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் 23

## பணவீக்கம் குறைந்தது

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதம் 50.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், கடந்த ஏப்ரல் மாதம் 35.3 சதவீதமாக 23

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

### வவுனியாவில் ஆலய உற்சவத்தில் சம்பவம்



(வவுனியா)

வவுனியா எல்லப்பர் மருதங்குளம் பகுதியிலுள்ள ஆலய உற்சவத்தில் மின்சாரம் தாக்கி 23

## கிளிநொச்சியில் விபத்து; இளைஞன் மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் புலோலி சாரையடி பகுதியைச் சேர்ந்த 27 வயதான சத்தியமூர்த்தி சத்தியன் 23

## மூளாய் பகுதியில் வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதல் ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த 43 வயதுடைய நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட் 23

## குறைந்த வருமானம் பெறுவோருக்கு சீன உதவியுடன் புதிய வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

சீன உதவியுடன் கொழும்பில் வசதி குறைந்தவர்களுக்கான புதிய வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த புதிய வீடமைப்புத் திட்டத்திற்காக சீனாவினால் 450 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் 05 இடங்களில் இந்த வீடுகள் கட்டப்படவுள்ளதாக நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டுவசதி அமைச்சின் செயலாளர், டபிள்யூ.எஸ்.சத்யானந்தா குறிப்பிட்டார்.

இதன்கீழ் 1,995 வீடுகள் கட்டப்படவுள்ளதுடன், அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இத்திட்டம் நிறைவடையும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15412)

**077 814 7389, 077 986 5457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15412)

**077 814 7389, 077 986 5457**


## நண்பனை கத்தியால் குத்தி கொன்றுவிட்டு தப்பிக்க முயன்றவர் கைது

அம்பலாங்கொடை ஹிரேவத்த பிரதேசத்தில் ஒன்றாக உணவருந்திய பின்னர் தனது நண்பரை கத்தியால் குத்திக் கொலை செய்த சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்காக இரண்டுநாட்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் கட்டுநாயக்கவிமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கட்டு நாயக்க விமான நிலையத்தின் கட்டுப்பாட்டாளருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சந்தேக நபர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முடியாமல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட ஹிரேவத்தையைச் சேர்ந்த ஆர் ஜே. ரொஷான் குமார என்ற 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே சந்தேக நபரால் கொல்லப்பட்டுள்ளார். (ம-7,9)


# மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது. எழுத்து எழுதி விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை (15409)

**077 905 8615**
viber & whatsapp

# சொர்க்கம் திருமண சேவை

1. கனடாவில் வசிக்கும் 30 வயது மற்றும் 37 வயதுடைய சித்திரை நட்சத்திர மணமகன்களுக்கு அழகிய மணமகள்கள் தேவை
2. கனடாவில் வசிக்கும் 30 வயதுடைய மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
3. அவுஸ்ரேலியா PR உள்ள பூரட்டாதி நட்சத்திரம் 1983 இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

(15406)

**0014166661855 (கனடா)**
**077 200 0230 (யாழ்ப்பாணம்)**
**077 887 6969**

# காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி 3 ஆம் ஒழுங்கை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகே 4 1/4 பரப்பு காணி விற்பனைக்கு (யாழ் ஆரியர் குளத்திற்கு அருகே).விலை பேசித்தீர்மானிக்கலாம். (15410)

**077 892 8094/076 995 2499**

# விசா சம்பந்தமான ஆலோசனைகள்

இந்தியா விசா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான Tour விசாக்கள் மற்றும் கனடா நாட்டிற்கான Student விசா தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

Hybrid International Hub (pvt) Ltd,Jaffna (C-6453)

**076 250 0098/021 222 1265**


# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 03 . 1938



இறப்பு 29 . 04 . 2023

## திருமதி சிவகுரு வள்ளியம்மை

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட சிவகுரு வள்ளியம்மை நேற்று (29.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் தமிழ்ப் பூங்கா ஸ்தாபகர் அமரர் சிவகுரு அவர்களின் அன்பு மனைவியும், பூபாலசிங்கம், சிவானந்தம், கணேசலிங்கம், நந்தகோபால், வடிவேல், வனிதா, சிவ பகீரதி, சிவபூங்கா, சிவநாதன், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் பூவரன்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 959 7145 (C-6454) தகவல்: குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 18 - 06 - 1957



உதிர்வு 29 - 04 - 2023

அமரர்

## ஐயாத்துரை சிவநாதன்

**(ஸ்தாபகர் - மருதம் வியாபார நிறுவனங்கள்)**

மருதம் வியாபார நிறுவனங்களின் ஸ்தாபகர் திரு.**ஐயாத்துரை சிவநாதன்** அவர்கள் நேற்று (29.04.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

[illegible] & [illegible] காட்வெயர் (C-6452)

நாகலிங்கம் தெய்வேந்திரம் & பிள்ளைகள் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினமான நாளை கொழும்பில் பாரிய போராட்டம்

## ஜோசப் ஸ்டாலின் அழைப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக அனைத்து சிவில் சமூக அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை மே 1 ஆம் திகதியான நாளை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மே தினக்கூட்டமானது மதியம் 1 மணியளிவில் கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகில் இருந்து பேரணி ஆரம்பமாகவுள்ளதாகவும் இதில் மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் மற்றும் மக்களின் கோரிக்கைகளையே முன் வைக்கவுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் தலைமையிலான அரசாங்கம் மக்களின் ஆணை இல்லாமலே செயற்படுவதாகவும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுடன் செயற்படவுள்ளதாகவும் அவ்வாறு செயற்பட்டால் அவை மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே தோற்றுவிக்கும் என்றும் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் மீள செலுத்த வேண்டும் என்றும் எதிர்கால சந்ததிகள் எவ்வாறு இந்த நாட்டில் வாழ முடியும் என்றும் கோள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை வெளியில் கொண்டு வருவதில் தொழிற்சங்கங்கள் முன்நின்று செயற்படுவதனாலேயே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை கொண்டு வருவதற்கு அரசு முயற்சிப்பதாக ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# டெங்கு அபாய வலயங்களாக யாழ். உட்பட 15 மாவட்டங்கள்


(யாழ்ப்பாணம்)

15 மாவட்டங்களில் உள்ள 55 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்கள் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் டெங்கு அபாய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், குருணாகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் டெங்கு அபாயப் பகுதிகளில் உள்ளடங்கியுள்ளன. இதேவேளை, மேல் மாகாணத்தின் சகல பிரதேசங்களையும் உட்படுத்தி கடந்த 26 ஆம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (4)

# இலகுரக தொடரூந்து விரைவில் கொழும்புக்கு



(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியில் இடைநிறுத்தப்பட்ட இலகுரக தொடரூந்து செயற்றிட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நிபுணர்களின் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யு.எஸ்.சத்யானந்த தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் செயற்றிட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படவுள்ளது. இந்த செயற்றிட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான யோசனை நிதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் இந்த திட்டத்திற்காக ஆயிரத்து800 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

இதன் மூலம் கொழும்பு கோட்டை முதல் மாலபே வரை தூண்களின் ஊடாக பயணிக்கும் இலகு ரக தொடரூந்து செயற்றிட்டத்தில் மூன்று உப மார்க்கங்களையும் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

கொழும்பு வீதிகளில் காணப்படும் நெரிசலை குறைத்தல் உள்ளிட்ட பலன்களை இந்த திட்டத்தின் ஊடாக அடைய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

16 கிலோமீற்றர் தூரத்தில் 16 தரிப்பிடங்களுடன் நிர்மாணிக்கப்படும் இந்த இலகுரக தொடரூந்து செயற்றிட்டத்தின் ஊடாக கொழும்பு கோட்டையில் இருந்து மாலபேவுக்கு 30 நிமிடங்களில் செல்ல முடியும் என தெரிவித்துள்ளார். (4)

# தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பில் வெட்டிக் கொலை

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, மட்டக்குளியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சுபாரத்தினம் என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரவு 10 மணியளவில் இவரின் வீட்டுக்குள் வாள்களுடன் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கொலையைப் புரிந்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவரும் நீர்கொழும்பு பொலிஸார், கொலைச் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதாகவில்லை என்று தெரிவித்தனர். (4)

# உள்ளூராட்சிசபை தேர்தல் இரத்துச் செய்யப்படவில்லை

## பிரதமர் தினேஸ்



(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதே தவிர இரத்துச் செய்யப்படவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச ஊழியர்கள் தேர்தல் சட்டத்தை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.


உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்க கொள்கை மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களுக்கு அமையவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# மிருகக்காட்சிச்சாலைக்காகவே குரங்குகளை கோரியிருந்தோம்

## சீனா தெரிவிப்பு



(கொழும்பு)

சீனாவிலுள்ள மிருகக்காட்சிசாலைகளில் கண்காட்சிக்காக இலங்கை குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் சீன நிறுவனம் ஒன்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரரிடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனத்தின் முன்மொழிவை விவசாய அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்ததுடன் பிரேரணையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்படவுள்ளது.

மேலும் அமைச்சரவை உபகுழு வழங்கும் இறுதி தீர்மானத்தின் அடிப்படையில் குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான பிரேரணை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை குறித்த சீன நிறுவனம் முதலில் 500 குரங்குகளை வழங்குமாறு விவசாய அமைச்சிடம் கோரியிருந்த போதிலும் தற்போது 1500 குரங்குகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்ல தொடக்கம் அமையவில்லை தோல்வி குறித்து கப்டன் டோனி



துடுப்பாட்டத்தில் நல்ல தொடக்கம் அமையவே இல்லை என்று சி.எஸ்.கே அணியின் தோல்வி குறித்து கப்டன் டோனி விளக்கம் கொடுத்துள்ளார்.

தற்போது 16 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி பல மாநிலங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கடந்த 27 ஆம் திகதி ஜெய்ப்பூரில் இருக்கும் சவாய் மான்சிங் மைதானத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியும் நேருக்கு நேர் மோதின. இப்போட்டியில் முதலில் ராஜஸ்தான் அணி துடுப்பாட்டத்தில் இறங்கியது. இதன் பின் 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 202 ஓட்டங்களை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சேர்த்தது.

203 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களத்தில் இறங்கியது. ஆனால் இப்போட்டியில் சென்னை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்களை சேர்த்தது. இதனால், ராஜஸ்தான் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னையை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்நிலையில், தோல்வி குறித்து சி.எஸ்.கே.அணி கப்டன் டோனி கருத்து தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்டம் செய்தபோது முதல் 6 ஓவர்களில் அதிக ஓட்டங்களை எடுத்தோம். ஆடு களமும் ராஜஸ்தான் துடுப்பாட்டத்திற்கு சாதகமாகவே அமைந்தது. இதனால், அவர்களுக்கு நிறைய ஓட்டங்கள் கிடைத்து விட்டது.

பந்து வீச்சாளர்களும் நன்றாகவே பந்தை வீசினார்கள். இப்போட்டியில் அதிக ஓட்டங்கள் இலக்காக இருந்தது. பவர் ப்ளேயில் சென்னை வீரர்கள் நன்றாக விளையாடி இருக்க வேண்டும். ஆனால், துடுப்பாட்டத்திலும் நல்ல தொடக்கம் அமையவே இல்லை என்று தெரிவித்துள்ளார். (4)

# ஐ.பி.எல் தொடரில் இருந்து வாஷிங்டன் சுந்தர் விலகல்



16 ஆவது ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் 31 ஆம் திகதி கோலாகலமாக தொடங்கி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்காக தமிழகத்தை சேர்ந்த வாஷிங்டன் சுந்தர் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

இந்த தகவலை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி நிர்வாகம் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்து உள்ளது.

அந்த அணியின் முக்கிய வீரராக செயற்பட்டு வந்த வாஷிங்டன் சுந்தர், காயம் காரணமாக விலகியிருப்பது அந்த அணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

மேலும் நடப்பு தொடரில் அந்த அணி இரு வெற்றிகளை மட்டும் பெற்று புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (4)


# விராட்கோலி சாதனை

ஐ.பி.எல் 2023 இருபது-20 கிரிக்கெட் தொடரில் 36 ஆவது லீக் போட்டியில் ரோயல் சேலஞ் சர்ஸ் பெங்களூர் அணியை அதன் சொந்த ஊரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

சின்னசாமி மைதானத்தில் நடைபெற்ற அந்த போட்டியில் கொல்கத்தா 20 ஓவர்களில் 200 ஓட்டங்கள் குவித்தது. அதை தொடர்ந்து 201 ஓட்டங்களை துரத்திய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 179 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

அதிகபட்சமாக விராட் கோலி 54 ஓட்டங்களை எடுத்தார்.

விராட் கோலி அரை சதம் அடித்ததன் மூலம் பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் இந்தியா, ஐ.பி.எல், உள்ளூர் என அனைத்து வகையான இருபது-20 போட்டிகளையும் சேர்த்து இதுவரை விராட் கோலி மொத்தம் 3015 ஓட்டங்களை அடித்துள்ளார். இதன் வாயிலாக உலக இருபது-20 கிரிக்கெட்டில் ஒரு குறிப்பிட்ட மைதானத்தில் 3000 ஓட்டங்கள் அடித்த முதல் வீரர் என்ற புதிய சாதனையை அவர் படைத்துள்ளார். (4)



# அதிரடி காட்டிய லக்னோ போராடி தோற்றது பஞ்சாப்

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் மொகாலியில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்,பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற பஞ்சாப் அணி பீல்டிங் தேர்வு செய்தது. அதன் படி முதலில் ஆடிய லக்னோ சுப்பர் ஜெயண்ட் அணி வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

லக்னோ அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்கள் என்ற பெரிய ஸ்கோரை எட்டியது. ஐ.பி.எல் வரலாற்றில் இரண்டாவது அதிகபட்ச ஸ்கோர் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மார்கஸ் ஸ்டோய்னிஸ் 40 பந்துகளில் 72 ஓட்டங்களும் விளாசினர். கைல் மேயர்ஸ் அரை சதமடித்து, 54 ஓட்டங்கள் சேர்த்தார்.

நிகோலஸ் பூரன் 19 பந்துகளில் 7 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 45 ஓட்டங்களும்,



ஆயுஷ் பதோனி 43 ஓட்டங்களும் எடுத்தனர்.பஞ்சாப் சார்பில் ரபாடா 2 விக்கெட் எடுத்தார். இதையடுத்து 258 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது.

கப்டன் ஷிகர் தவான் ஒரு ஓட்டத்தில் அவுட்டானார். பிரப்சிம்ரன் சிங் 9 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். சிக்கந்தர் ரசா 36 ஓட்டமும் லிவிங்ஸ்டோன் 23 ஓட்டமும் சாம் கர்ரன் 21 ஓட்டமும் எடுத்தனர்.

ஒரு புறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் அதர்வா டெய்ட் அதிரடியாக ஆடினார். அவர் 36 பந்தில் 2 சிக்சர், 8 பவுண்டரி உட்பட 66 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார்.

இறுதியில் பஞ்சாப் அணி 201 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டானது. இதன் மூலம் 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி 5 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. லக்னோ சார்பில் யாஷ் தாக்குர் 4 விக்கெட்டும் நவீன் உல் ஹக் 3 விக்கெட்டும் ரவி பிஷ்னோய் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். (4)

# டெஸ்ட் சம்பியன் ஷிப்; இந்திய அணி அறிவிப்பு

உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோகித் சர்மா தலைமையில் 15 பேர் கொண்ட இந்திய அணியை பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் ரஹானேவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சுப்மான் கில், புஜாரா கோலி, கே. எல். ராகுல், கே.எஸ்.பரத், அஸ்வின், ஜடேஜா ஆகியோரும் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய- அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIALOG SMART FLEET

## வசதியைப் பயன்படுத்தி எரிபொருள் வீண் விரயத்தை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்

உங்கள் வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு ஏற்படும் செலவுகளை குறைத்து வியாபாரத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்த GPS தொழில்நுட்பத்தில் உருவான DIALOG SMART FLEET இனைப் பயன்படுத்தி பலவகையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- அனைத்து தகவல்களும் Mobile app ஊடாக
- என்ஜின் இயங்கிய கால அளவு பயணம் செய்த தூரம் ஆகியவற்றை சரியாக கணித்திடுங்கள்
- எரிபொருள் மோசடியை தவிர்த்திடுங்கள்
- வாகனத்தின் வேகம், இருக்கும் இடம், பயணம் செய்த இடங்கள் மற்றும் மேலும் பல தகவல்கள்



GPS சாதனங்களுக்கு 10% விசேட விலைக்கழிவு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 0777 332 118

business@dialog.lk business.dialog.lk

(C-1986)

Dialog ENTERPRISE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினத்தை முன்னிட்டு யாழில் வாகன பேரணி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மே தினத்தன்று மோட்டார் வாகன ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது.

மே. முதலாம் திகதி காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செலயகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலகம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நிறைவு பெறவுள்ளது.

உலகம் முழுவதும் மே தினம் உழைப்பாளர்கள் உரிமைக்காக கொண்டாடப்படுகின்ற நிலையில் அன்றைய தினம் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (4-33)

## சான்றுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் AR/50/20, AR/643/20, AR/447/21, AR/451/21, AR/666/21,AR/667/21, AR/16/19,AR/195/19, AR/323/19,AR/30/22, 25230,21141,AR/55/20, AR/54/20,AR/51/20, AR/43/20, AR/53/20, 21044;AR/269/18, AR/268/18, 17452, 17734, 17223 ஆகியவற்றில் உள்ள மோட்டார் சைககிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் வாகனங்களின் உரிமையாளிகள் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரத்தைக் காட்டி பெற்றுக்கொள்ளவும். அவ்வாறு உரிமை கோரப்படாத பட்சத்தில் சான்றுப் பொருட்கள் அனைத்தும் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற நீதிவான் அறிவித்துள்ளார். (4)

# மரண அறிவித்தல்

## திரு. ஐயாத்துரை சிவநாதன்

(ஸ்தாபகர்– மருதம் வியாபார நிறுவனங்கள்)

மலர்வு 18.06.1957

உதிர்வு 29.04.2023



நெல்லியடியை பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஐயாத்துரை சிவநாதன் அவர்கள் (ஸ்தாபகர்- மருதம் வியாபார நிறுவனங்கள்) நேற்று (29.04.2023) அதிகாலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு ம்கனும் காலஞ்சென்ற நடராசா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அமரத்துவம் அடைந்த கிருத்திகாவின் பாசமிகு கணவரும் கிருஷாந்த், ஜெகன்நாத்,துவாகரன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஜிதா, புஷ்பமீரா ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மநாயகி, தேவராசா, கோமளேஸ்வரி, காலஞ்சென்ற நடேசன், கமலநாயகி மற்றும் கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராசா, சிவநாதன், கௌரி, செல்வநாயகி, காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் மைத்துனரும் கிருத்திக், திகாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 30.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-6451)

தகவல்
குடும்பத்தினர்.

மருதம்-கரவெட்டி மத்தி,கரவெட்டி.
கிருஷாந்த் -077 7550 966
ஜெகன்நாத் - 074 151 8491



2022/2023 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை இராணுவத்தின் மேலதிக பங்களிப்புடன் வறிய குடும்பங்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வின் இரண்டாம் கட்டம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)

## அந்தியேஷ்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த

### அமரர்.சாமியார்ப்பிள்ளை கறுப்பையாபிள்ளை



அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் எதிர்வரும் 01.05.2023 நாளை திங்கட்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று. ஸ்ரீ செல்வச்சந்நிதி புனித தீர்த்தக் கரையில் அஸ்த்தி கரைக்கப்படும். தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் மு.ப. 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (15405)

இங்கனம் -குடும்பத்தினர்
075 9427 601,
076 4358 923,
00919444114746

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

# இராசிபலன்

30.04.2023
சித்திரை 17, ஞாயிற்றுக்கிழமை
தசமி முன்னிரவு 8.21 மணிவரை

மகம் பிற்பகல் 3.27 மணிவரை
சுபநேரம் -8.58-10.28 மணிவரை
இராகுகாலம்- 4.28-5.58 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தராடம், திருவோணம்.

வளவன்

**மேஷம்** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாடு மகத்துவம் தரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், உங்களின் யோசனைக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கௌரவமான நாள்.

**மகரம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பெரிய மனித்ர்களின் சந்திப்புகள் இடம்பெறும் சந்தர்ப்பமுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** ஒரு வேலையை முடிக்க கூடிய பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்,வழிபாடு ஆனந்தம் தரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கும் நன்மை தேடிக் கொள்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 395

Viber 076 636 3378



**தமிழர் பூர்வீக வழிபாட்டுத் தலங்களை இலக்கு வைத்து அங்கு பௌத்தத்தைத் திணிக்கும் அரசுகளுக்கு எதிராக எத்தனை போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் பயன் ஏதும் இல்லை. ஆனால்...**

# தமிழினத்தின் பூர்வீகங்களை அழிப்பது முறையோ?

குரைக்கின்ற நாய் கடிக்காது என்றொரு பழமொழியுண்டு. இந்தப் பழமொழிக்கும் ஈழ சைவத் தமிழ் மக்களுக்கும் ஒற்றுமை உண்டு.

இப் பழமொழிக்கும் சைவத் தமிழ் மக்களுக்கும் என்ன ஒற்றுமை உண்டு என்ற விடயத்தை இப் பத்தியின் முடிவில் பார்ப்போம்.

இலங்கைத் திரு நாட்டில் தற்போது என்ன நடக்கிறது என்றே புரியவில்லை.

அந்தளவிற்கு நாடு மிக மோசமான குழப்ப நிலையில் உண்டு என்பதே உண்மையானது.

காலம் காலமாக வந்த ஆட்சியாளர்களின் சுரண்டல்கள் ஒட்டு மொத்தமாய் இப்போது பொருளாதார சுமையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் ஏற்றுத் தான் ஆக வேண்டும்.

அந்தளவிற்கு பொருளாதாரச் சுமை மக்களின் முதுகுகளில் முட்டுக் கொடுக்காத கொம்பாய் நெரிக்கத் தொடங்கி விட்டது.

நாட்டில் ஏற்பட்ட பெரும் குழப்பத்திற்குப் பின்னர் எவரும் எதிர்பார்க்காத வகையில் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தார் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க.

இதை எவரும் எதிர்பார்க்காவிடினும் தற்போதைய இந் நெருக்கடி நிலையைச் சமாளிக்கக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே என பலரும் அவரை ஆமோதித்தனர்.



தையிட்டியில் நிர்மானிக்கப்படும் பௌத்தவிகாரை

அவரின் வருகை சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதான வருகையாகவே அமைந்திருந்தது.

அரசியல் சாணக்கியத்தை கரைத்துக் குடித்த ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத் தலைவர்களை தன் பக்கம் திருப்புவதில் மிகத் தீவிரம் காட்டினார்.அதில் அவர் வெற்றியும் பெற்றார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களைத் தேடித்தேடி பயங்கரவாத தடைச்சட்டத்தினூடே கைது செய்து சிறைகளில் அடைக்கவும் செய்தார்.

ஏலவே பல அவகாசங்களை வெறும் கையினால் முழம்போட்டது போல கடந்து சென்ற அரசாங்கத்தை ஒத்த அரசைப் போலவே ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியும் அமைந்திருந்தது. என்பதை நாம் சொல்லித் தான் தெரியவேண்டியதில்லை.

அந்தளவிற்கு தமிழர் பிரதேசங்கள் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டே இருந்ததுடன் தமிழர் பிரதேசங்களின் பௌத்த விகாரைகளை அமைக்கும் பணிகளும் மிகத் தீவிரமாக நடந்து கொண்டே இருக்கின்றன.

இதில் வேதனையான விடயம் என்னவெனின் தமிழினத்தின் பூர்வீக வழிபாட்டு தலங்களை இலக்கு வைத்து அங்கு புத்தரை குடியமர்த்தும் செயற்றிட்டமே.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினூடே எதையும் சாதித்துவிட முடியாது எனத் தெரிந்திருந்தும் தமிழினம் தனது எதிர்ப்பை பலமாகத் தெரிவிக்க ஓர் இடத்திலும் தவறவில்லை.

ஆனால் அதற்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை என்பது தான் மன வேதனை. முறையான அனுமதியின்றி மத சின்னங்களை பிரதிஸ்டை செய்ய எவருக்கும் அனுமதி இல்லை என என ஜனாதிபதி தெரிவித்திருந்தும் தொடர்ந்து தமிழர் பூர்வீகங்களுக்குள் குடிபுகும் புத்தரை தடுக்க எவரும் முன்வர வில்லை.

குருந்தூர் மலை பறித்தெடுக்கப்பட்டதன் பின், வெடுக்கு நாறி ஆதிசிவன் ஆலயம் உடைத்தழிக்கப்பட்டதுடன் தொல்லியல் திணைக்களம் என்ற போர்வையில் தமிழர் பூர்வீகங்களின் வரலாறுகளை மாற்றும் செயற்றிட்டம் மிகத் தீவிரமாக நடந்தவண்ணமே இருக்கின்றன.

நிலை இதுவாக இருக்கையில் கச்சதீவில் இராணுவத்தினர் வழிபாடாற்றுவதற்காக புத்தர் சிலை ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அது எந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமோ, எதிர்ப்பு அறிக்கையிடலோ இல்லாமல் அகற்றப்பட்டிருக்கிறது.

தமிழர் பூர்வீக வழிபாட்டுத் தலங்களில் நீதிமன்ற தடைகளையும் மீறி பௌத்த விகாரைகளைக்கட்டும் இந்த வேளையில் கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை எவ்வாறு அகற்றப்பட்டது என்பதில், தமிழ் மக்களுக்கு ஆச்சர்யமே மிஞ்சியது.

அப்படியெனில் அரசிடம் சைவத்தை அழிக்கும் நோக்கமா விரைந்து கிடக்கிறது என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டதான செய்திகள் வெளிவரும் நேரத்தில் காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு நடந்ததான செய்திகளும் வெளிவந்திருந்தன.

மிகப் பலமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு நடை பெற்றதாகவும் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகளில் தையிட்டியில் அமைக்கப்பட்ட பௌத்தவிகாரையே மிக உயரமான விகாரை என்ற செய்தியும் வெளியாகி உள்ளது.

அப்படியெனின் பேரினவாத அரசுகள் சைவத்தை அழித்தொழிப்பதில் மாத்திரம் ஆர்வம் காட்டுகின்றனரோ என தமிழ் மக்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர்.

சைவத் தமிழ் பிரதேசங்களில் தமிழர் பூர்விக வழிபாட்டுத் தலங்களை பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ் மக்கள் பல போராட்டங்களை முன்னெடுத்து பயனின்றிப் போய்விட்டது.

கச்சதீவில் வைக்கப்பட்ட புத்தர் சிலை எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி அகற்றப்பட்டிருக்கிறது.

இதுதான் குரைக்கின்ற நாய் கடிக்காது என்பதுவோ?

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நெடுந்தீவில் கொல்லப்பட்ட மூத்த பிரஜைகள் ஆறு பேருக்கும் எமது மௌன அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நூறு வயது நிரம்பிய ஒரு பாட்டியை வெட்டிக் கொலை செய்த கொடுமை இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் நடந்திருக்காது.

இதற்காக இந்த நாடு வெட்கப்பட வேண்டும். அதே நேரம் கொலை, கொள்ளை , போதைப் பாவனை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகள் இலங்கைக்கு திரும்பி அனுப்புகின்றவர்களை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் இருக்க வேணும். அதிலும் மனநிலை பாதிப்பானவர்களைப் பராமரிப்பதற்கான காப்பகங்கள் அமைக்கப்படுவதும் அவசியம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து, நெடுந்தீவில் இறந்த ஆறு பேருக்கும் மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார். வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரரை மீளவும் பிரதிஷ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டிருக்குது.

என்னைப் பொறுத்த வரையில் நீதிமன்றங்களால் மட்டும் தான் தமிழ் மக்களின்ர உரிமைகளை நிலை நாட்ட முடியும்.

**கங்காணி-** வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஷ்வரரை பொது மக்கள் கூடிப் பிரதிஷ்டை செய்ய வேணும் இதில மந்திரம், கிரியா பாவனை எதுவும் தேவையில்லை.

**ஓம் நமசிவாய**
**ஓம் சிவாய நம**

எண்டு உள்ளத்தால சிவனை நினைந்து லிங்கேஷ்வரரை பிரதிஷ்டை செய்தால் அது போதும்.

**சாத்திரியார்-** அதெண்டால் உண்மை தான். பெரும் எடுப்புகள் தேவையில்லை.

அமைச்சர்கள் வரவேணும். பாபு சர்மா மந்திரம் சொல்ல வேணும் எண்டதால தான், அண்டைக்குச் சிவலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்ய முடியாமல் போயிற்றுது. இனியும் அவ்வாறான எடுப்புகளை விட்டிட்டு மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியோடு சிவசிவா என்ற நாமத்தோட சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்தால் அதை அந்தச் சிவன் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்.

**மூப்பர்-** இப்ப எதிலும் அரசியல் லாபம் தேடுகிற அளவில எங்கட அரசியல் வாதிகள் வந்திட்டினம். ஆகையால இனி பொது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேணும்.

**சிறாப்பர்-** இது அரசியல் வாதிகளுக்கு மட்டுமல்ல. சில சமய அமைப்புகளும் அரசியல் வாதிகளை விட மிக மோசமாக நடந்து கொள்ளுகினம்.

அதிலும் சைவ சமயத்தில பல்வேறு அமைப்புக்கள் இருப்பதால, எதுவும் செய்ய முடியாமல் இருக்குது. இந்தாப் பாருங்க கச்சதீவில வைத்த் புத்தர் சிலையை யாழ்.ஆயர் இல்லம் எப்படி அகற்றி விட்டது.

எந்தத் தமிழ் அரசியல் வாதிகளிட்டயும் அவர்கள் போகவில்லை. ஏன்? நீதிமன்றத்தைக் கூட நாடவில்லை.

ஆனால் கச்சதீவில வைத்த புத்தர் சிலையை கடற்படை உடனடியாக அகற்றிப் போட்டுது. இங்க தான் கத்தோலிக்கத் திருச்சபையின்ர தலைமைத்துவம் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறம்.

**பண்டிதர்-** என்ன சிறாப்பர் சொல்லுறியள் சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களேன்.

**சிறாப்பர்-** சைவ சமயத்தில ஏக தலைமைத்துவம் இல்லை. இதால ஆளுக்கு ஆள் புதுப்புது அமைப்புகள்.

சரி , புதுப்புது அமைப்புகள் எண்டாலும் பரவாயில்லை. ஆனால் எல்லாரும் தங்கட பாட்டில கருத்து வெளியிடுறதால எந்தக் காரியத்தையும் சைவ சமயத்தில கனகச்சிதமாகச் செய்ய முடியவில்லை.

**விதானையார்-** அதெண்டா உண்மை தான். தீவகத்தின்ர நுழைவாயிலான பண்ணையில நாகபூஷணி அம்மன் சிலை வைத்ததை ஒரு சைவ சமய அமைப்பு எதிர்த்திருக்குது.

நயினாதீவு அம்மன் இருக்கும் போது எதற்கு இந்த அம்மன் சிலை எண்டு கேட்கிற அளவில எங்கட சைவ சமய அமைப்புக்கள் இருக்கும் எண்டால், சைவ சமயத்தை அழித்தொழிப்பதற்குச் சைவ சமயத்தவர்களே போதும் எண்டாயிற்று.

**பண்டிதர்-** சைவ சமயத்தில் மூன்று நான்கு வகையான கொள்கை கொண்ட அமைப்புக்கள் இருக்குது. அதில ஒரு தரப்பு பௌத்த மதத்தை தமக்குச் சார்பாக ஆக்க வேணும் எண்டு நினைக்குது. இன்னொரு தரப்பு கத்தோலிக்க மத குருமாரை அனுசரித்துக் கொண்டு தங்கட ஆன்மீக அரசியல்ல நடத்தப் பார்க்குது.

**இன்னொரு தரப்பு தம்மால் முடிந்த அளவு மக்கள் சேவை செய்வது. நான்காவது தரப்பு அறிக்கை விடுகிறதோட தங்கட அமைப்பைத் தக்க வைப்பது.**

இந்த நிலையில தான் எங்கட சைவ சமயம் இருக்குது.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கத்திற்கு கடும் ஆத்திரம் வந்தது.

**வாத்தியார்-** பண்டிதர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. ஒவ்வொரு சைவ சமய அமைப்புகளும் தங்கட பாட்டில நடக்க முடியாது.


ஆகையால, எங்களுக்கெண்டு நீண்ட நெடுங்காலமாய் இருக்கிற நல்லை ஆதீனம் தான் சைவ மக்களின் ஒரே தலைமையாக இருக்க முடியும்.

ஏனைய அமைப்புகள் நல்லை ஆதீனத்தின்ர பரிபாலனத்தில இயங்கலாம்.

ஆகையால இனிமேல் எங்கட சைவ சமயத்தின்ர ஒரே தலைமை நல்லை ஆதீனம் என்ற தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்றுவம். இவ்வாறு சைவ சமயத்தின்ர தலைமையாக நல்லை ஆதீனம் இருக்க, ஏனைய சைவ அமைப்புகள் ஆதீனத்தோட சேர்ந்து சில பொறுப்புக்களை எடுத்து அதனை நிறைவேற்றுகின்ற பணியை ஆற்றலாம்.


இன்று பல சைவ ஆலயங்கள் பிணக்குகள் காரணமாக நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேணும். ஆலயங்களில் பிணக்குகள் ஏற்பட்டால், அதனை நல்லை ஆதீனம் தீர்த்து வைப்பதாக நிலைமையை மாற்ற வேணும். இந்த விடயத்தில, நல்லை ஆதீனத்தோடு சேர்ந்து இன்னொரு சைவ சமய அமைப்பு கையாளலாம். இவ்வாறு வாத்தியார் கூறியதும் அதனை ஆலடி மாநாடு ஏற்றுக் கொள்ள, அதனை ஆசீர்வதிப் பது போல ஆலடி பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**




## நல்லை ஆதீனமே
## சைவ சமயத்தின் தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மரங்களை அழத்து மாடி வீடுகட்டும் நாகரிகம் தேவையா வியாசரே?**

**வீட்டிற்கு வருபவர்களை இன்முனத்துடன் வரவேற்கும் தன்மை தற்போது அருகிவிட்டதே வியாசரே?**

**வாணியழகன் — முரசுமோட்டை**

**அறிவித்தல் வருமுன்னரே அமைச்சுப்பதவி ஆசனத்தில் அமர்வதற்கு ஆசைப்படுகின்றனரே?**

ஆசை வெட்கம் அறியாது என்றொரு பழமொழியுண்டு.

அது என்னவோ இந்த அரசியல் வாதிகளுக்கு மிக நன்றாய்ப் பொருந்தும்.

கருவாட்டுக் கடைப்பக்கம் போனால் நமக்கு மூக்கைப் பொத்த தோன்றும். ஆனால் அந்த கடைக்காரருக்கு அது பழகிவிட்டதால் சர்வ சாதாரணமாய் இருப்பார்.

மானம் இழப்பு எமக்கு கவரிமானாய் இருந்தாலும் சில அரசியல்வாதிகளுக்கு அது குளிருக்குப் போர்க்கும் கம்பளி போன்றதே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தொல்பொருள் திணைக்களத்தின் சின்னம் தொடர்பில் எழும் கருத்துக்கள் பற்றிக் கூறமுடியுமா?**

தொல்பொருள் திணைக்களம் தொடங்கி முப்பது வருடங்களுக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் இப்போதாவது அது தொடர்பில் கவனம் செலுத்தினார்களே என்று மகிழ்வடைவோம்.

உண்மையில் தொல்பொருள் திணைக்களம் எதற்காக, யாருக்காக வேலை செய்கிறது என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

நீதிமன்ற உத்தரவுகளை மீறக் கூடிய அளவில் அவர்களுக்கு அதிகாரம் உண்டா என்பதை அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும்.

தமிழர் பூர்வீகங்களை அழித்து அதில் உள்ள வரலாறுகளை மாற்றுவதுதான் அவர்களின் வேலையா?

**தருஷ் — வதிரி**

**வீட்டிற்கு வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்கும் தன்மை தற்போது அருகிவிட்டதே வியாசரே?**

வீட்டுக்கு விருந்தினர் வந்தால் கிடாய் அடித்து விருந்து கொடுக்கும் காலம் மாறிவிட்டது.

இப்போது யாரும் வீட்டிற்கு வந்தால் ஏன் வந்தீர்கள் என்ற கேள்வியே முன்னிலையில் நிற்கும்.

தொலைக்காட்சி தொடர்களுக்குள் மூழ்கிக் கிடக்கும் எம் தலைமுறைத் தாய்மார்களுக்கு வீட்டிற்கு வருபவர்களை கவனிக்க எங்கு நேரம் கிடைக்கும்.

முன்பு வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இப்போது தொலைக்காட்சியைப் பாருங்கள் என விட்டு விடுகின்றார்கள்,

எல்லாம் நவீனத்தின் ஆதிக்கமே.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**திகான் — வடமராட்சி**

**மரங்களை அழித்து மாடி வீடுகட்டும் நாகரிகம் தேவையா வியாசரே?**

வீட்டு முற்றத்தில் நிற்கும் வேப்ப மரம் நூறு வருடங்கள் கடந்த மரம். அதை வெட்டி விற்கலாம் என முடிவெடுத்துவிட்டேன் என்றார் ஒருவர்.

ஏன் என்றேன் வீட்டில் ஒரே குப்பையாக உள்ளதாம் அதைவிட பறவைகளின் தொல்லை தாங்க முடியவில்லையாம். வீட்டு வளவு முழுவதும் பறவை எச்சங்களாம்.

மரத்தை வெட்டி அதில் யன்னல் செய்து அதை மூடி ஏசிக் காற்று வாங்கும் முட்டாள்களை நினைக்க சிரிப்புதான் வந்தது.

இனி என்ன செய்வது எல்லாம் உலக அழிவுக்கான வழியே.

**சுதன் — குப்பிழான்**

**சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை செயற்படுத்த தயாராகும் அரசுக்கு சர்வதேச விசாரணையை ஏற்பது கடினமா?**

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி எமக்குத்தேவை. அதற்காக நாம் எதுவேண்டுமானாலும் செய்வோம். ஆனால் சர்வதேச விசாரணை எனும் பேச்சுக்கே இடம்இல்லை.

எமது இராணுவம் போர்க்குற்ற மீறல் எதிலும் ஈடுபட வில்லை. அவ்வாறு மீறி இருந்தாலும் அதை நாம் விசாரணை செய்வோம். இங்கு நாம் வைத்தது தான் சட்டம். சர்வதேச விசாரணை என்பதற்கு இடமே இல்லை.

இதை சர்வதேசமும் ஏற்றுத்தானே இலங்கைக்கு நிதி வழங்கியிருக்கிறது. அப்படியெனின் சர்வதேசத்திற்க தமிழர் பிரச்சினை இன அழிப்பு என்பது பற்றி கரிசனை இல்லை என்பது தானே பொருள்.

**ஜெனனி — மந்துவில்**

**உலகில் நாம் ஏன் படைக்கப்பட்டோம் வியாசரே கூறமுடியுமா?**

உலகில் பல கோடி உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றில் மிக மோசமானது மனித இனம்.

ஆசை எனும் ஒற்றை வார்த்தைக்குள் மனிதனின் ஒட்டு மொத்த சீத்துவக் கேட்டையும் கூறிவிடமுடியும்.

நிலையில்லாத இவ்வாழ்வை அர்த்த முள்ளதாக்க பிறரில் அன்பு செலுத்தத் தவறும் மனிதன் தனது தவறுகளை சரியானதாய் நியாயப்படுத்த முனைவதே மிகக் கொடூரமானது.

உலகில் மனித இனம் படைக்கப்பட்டதே உத்தரிப்பதற்காக. ஆம் மனம்போல வாழ்வு என்பார்களே அதுதான் மனித மனம் போலவே அவன் ஆக்கினைகளை அனுபவிப்பதற்காக இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றான்.

**மதுவன் — மீசாலை**

**சில மனிதர்களைக் கரடி என்கிறார்களே அதைப்பற்றிக் கூறமுடியுமா?**

காட்டு வழிப் பாதையில் செல்பவர்கள் கருக்கு மட்டை கொண்டு செல்லும் வழக்கத்தைக் கொண்டிருப்பார்கள்.

ஏனென்றால் காட்டில் திடீரென கரடி வந்தால் கரடிக்கு கருக்கு மட்டையை நீட்ட அது அதைப் பற்றிப் பிடிக்குமாம். அப்போது கருக்கு மட்டையை பலமாக இழுந்துவிட கரடியின் கையில் கருக்கு மட்டை வெட்டிவிடும் கரடி அந்த வலியைத் தாங்க இயலாமல் ஓடிவிடுமாம்.

கரடிகள் குழந்தைப் பிள்ளை அழுவது போல அழக்கூடியது. பலர் காட்டில் கரடி அழும் போது குழந்தை அழுகின்றது என ஏமாந்து போவார்கள்.

அது சரி மனிதர்களைக் கரடிகளுடன் ஒப்பிடும் அளவிற்கு மனிதன் அவ்வளவு சிறந்தவன் இல்லையே.

**சங்கரசிவன் — வதிரி**

**வடக்கு-கிழக்கைப் பிரித்தவர்கள் இப்போது உள்ளூராட்சி சபைகளினூடாக தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்கிறார்களே?**

வடக்கு – கிழக்கு தமிழினத்தின் பூர்வீகம். இந்தப் பூர்வீகத்தை அறுத்தவர்கள் வாழ்வில் நிம்மதியாய் வாழமாட்டார்கள்.

ஏனென்றால் தமிழினம் வடக்கு –கிழக்கு பிரிப்பை விரும்பவில்லை.

அதைச் செய்தவர்களுக்கு சாபம் கொடுத்தார்கள் . அந்தச் சாபம் தான் தற்போது வேலை செய்கிறது போல.

தமிழினத்திற்கு யார் தீங்கு செய்தாலும் அதற்கான தண்டனையை கடவுள் நிச்சயம் வழங்குவார்.

என்ன காலம் எடுத்துக் கொள்ளும் ஆனால் தண்டனை நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## மூட்டையை வைத்தால்

அக்கா இருவரையும் காணவில்லை. வந்தவுடன் தலையில் ரோசாப் பூவைச் சூடுகிறான். ஒரு அறைக்கு மட்டும் செல்ல வேண்டாம் என்கிறான். ஏதோ சூழ்ச்சி நடக்கி றது என்பது அவளுக் குப் புரிந்தது.

அறிவுக்கூர்மை உடைய அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள். திறக்கக் கூடாது என்று தடுத்த அறைக்கும் ரோசாப் பூவிற்கும் ஏதோ தொடர்பு உள்ளது என்று அவளுக்குத் தோன்றியது.



தலையில் இருந்த ரோசாப் பூவை எடுத்தாள். அருகில் இருந்த கிண்ணத்தில் அதை வைத்து மூடினாள்.

மெதுவாக நடந்து அந்த அறைக் கதவைத் திறந்தாள். உள்ளே தீயில் பலர் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களில் தன் இரண்டு அக்காவும் இருப்பதைக் கண்டு திகைத்தாள்.

எங்களால் இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை. தங்கையே! நீதான் எப்படியாவது எங்களைக் காப்பாற்ற வேண்டும். புத்திசாலியாகிய நீ ரோசாப் பூவை சூடாமலேயே வந்து இருக்கிறாய். நீ வந்திருப்பது அந்தப் பிசாசிற்குத் தெரிய வாய்ப்பே இல்லை என்றாள் மூத்தவள்.

கவலைப்படாதீர்கள் நான் உங்களை எப்படியும் காப்பாற்றுகிறேன் என்று வெளியே சென்றாள் அவள்.

பழையபடி அந்த அறையைப் பூட்டினாள். ரோசாப் பூவை எடுத்துத் தலையில் மீண்டும் அணிந்து கொண்டாள்.

இரவு நேரம், அவன் வந்தான். ரோசாப் பூ வாடாததைக் கண்டான். அவள் அந்த அறைக்குள் நுழைந்திருக்க மாட்டாள் என்று நினைத்தான்.

நாள்தோறும் அவள் தலையில் புதிய ரோசாப் பூவை சூடிவிட்டுச் சென்றான் அவன்.

தன் இரண்டு அக்காவையும் எப்படித் தப்பிக்க வைப்பது என்று சிந்தனையில் ஆழ்ந்தாள் அவள்.

நான்கு நாட்கள் சென்றன.

இளைஞனைப் பார்த்து அவள், இங்கே எனக்கு ஏராளமான வேலை இருக்கிறது. துணி துவைக்க நேரமே இல்லை. அழுக்குத் துணிகளை எல்லாம் பெரிய மூட்டையாகக் கட்டி வைத்து இருக்கிறேன். என் அம்மாவின் வீட்டில் தந்துவிட்டு வாருங்கள் என்றாள்.

நாளை மாலை அந்த மூட்டையைத் தூக்கிச் செல்கிறேன் என்றான் அவன்.

பொழுது விடிந்தது. அவன் வழக்கம் போல வெளியே சென்றான். அறைக்குள் சென்ற அவள் மூத்த அக்காவை வெளியே கொண்டு வந்தாள்.

நீ நம் வீட்டிற்குச் செல்ல ஏற்பாடு செய்துள்ளேன். நான் சொல்கின்றபடி நடந்து கொள். எல்லோரும் தப்பிக்கலாம் என்றாள் அவள்.

பெரிய சாக்கிற்குள் அக்காவை நுழைத்தாள் அவள். சுற்றிலும் அழுக்குத் துணிகளை வைத்தாள். சாக்கை இறுகக் கட்டினாள்.

இளைஞன் வந்தான். அவனிடம் அவள், அழுக்குத் துணி மூட்டை தயாராக உள்ளது. அதைத் தூக்கிச் செல்லுங்கள். வழியில் எங்கும் மூட்டையை வைக்கக் கூடாது.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 05

எப்படிச் சொல்ல வேண்டும் என்பதற்கே இத்தனை ஆழம் இருக்கிறபோது, எதைச் சொல்ல வேண்டும் என்பதற்கு எத்தனை ஆழம் இருக்க வேண்டும்?

ஓர் எழுத்தாளன் தான் உணர்ந்ததை மட்டுமே உணர்த்துகிற போது தான் கலைக்கு ஒரு வடிவமே வருகிறது. ஓர் எஸ்கிமோ எழுத்தாளனுக்கு எங்கள் ஊர்க் கரிசல் மண் கருவாக முடியாது.



இன்று பேனாப் பிடித்திருக்கும் எழுத்தாளர்கள் எல்லாம் ஒரே பிரசவ விடுதியில் பிறந்தவர்கள் அல்லர்.

அவர்களெல்லாம் வெவ்வேறு கிளைக் கலாசாரத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்.

அந்த எழுத்தாளர்களெல்லாம் அந்தந்த மண்ணின் மைந்தர்களுக்குத் தலைமை தாங்குவதும் தக்கது.

பிறக்கும் எழுத்துகளெல்லாம் அவரவர் படித்த புத்தகங்களின் குழந்தைகளாய் இல்லாமல் அவரவர் கண்ட வாழ்க்கையின் குழந்தைகளாய் இருப்பது நல்லது.

வழிகாட்டிச் சென்றிருக்கும் நம் மூத்த எழுத்தாளர்களே இதற்கு முன்னோடிகள்.

### எழுத்தும் - எழுத்தாளரும்

தங்கள் வயதுக்கு மீறிச் சாதித்திருக்கும் இளம் எழுத்தாளர்களும் இல்லாமலில்லை.

அவர்களின் பருந்துப் பார்வையும் சிங்க நோக்கும் சிந்தனைத் தெளிவும் அவர்களின் கைகளுக்கு மலர்க்கொத்து வழங்கிச் சிபாரிசு செய்கின்றன. ஆனால் அவர்களின் கண்களை மூடியிருக்கும் கர்வமும் இருதயத்தை ஆக்கிரமித்திருக்கும் இறுமாப்பும் மூத்தவர்களுக்கெல்லாம் அறிவு வருவதற்கு முன்பே மரணம் வந்துவிட்டது என்கிற மதர்ப்பும் அவர்களை மேலும் சிந்திக்கவோ, செயற்படவோ விடாமல் சிதைத்து விடுமோ என்கிற இலக்கிய அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

பழங்குட்டைகளைத் தூர்த்து விடும் அவரசத்தில் ஊற்றுக் கண்களையும் குருடாக்கி விடக்கூடாது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது.

**பழையது வேறு: பழைமை வேறு**

என் தாத்தா பயன்படுத்திய வாள் பழையது - ஆனால் அந்த வாளை ஏந்திய வலிமை பழைமையானது. இன்று வாள் எனக்கு வேண்டாமலிருக்கலாம். ஆனால் அந்த வலிமை என்றும் எனக்கு வேண்டியிருக்கிறது.

இன்று இளைஞர்கள் தூக்கி எறியத் துடிப்பது பழையதையா பழைமையையா என்ற முக்கியமான முடிவிற்கு வர வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

அவர்களின் கோபம் கூட சமூக நேசத்தின் இன்னொரு வடிவம்தான்.

ஆனால் நம் இளைஞர்கள் பழைமை என்னவென்று கற்றுத் தெளியும் முன்பே - கற்றுத் தெளியாமலேயே அதன் மேல் எச்சில் துப்ப எத்தணிக்கிறார்கள்.

நம் முன்னோர்கள் நட்ட பயிர்கள் விளைந்திருந்தால் அவற்றை அறுத்துக் கொண்டும். அழுகிப் போயிருந்தால் அவற்றை உரமாக்கிக் கொண்டும் பயணப்படுவதே பரிணாமம்.

ஆனால் நம் கலை -இலக்கிய அமைப்புகள் பழையனவற்றை ஒதுக்கவும் தெரியாமல் மூக்குவரை முழுகிய பிறகும் சுவாசிப்பதாய் பாவனை புரிகின்றன.

மக்கள் கலை இலக்கியக் கழகம் வெளியிட்டிருக்கும் சோசலிசக் கவிதைகளின் முன்னுரை நமது இந்த வேதனையின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

340

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மாரடைப்பு ஏன் ஏற்படுகிறது?

எமது இதயம் சக்தி வாய்ந்த பம்பியாகச் செயற்பட்டு உடல் முழுவதற்கும் குருதியை வழங்குகின்றது. இதயத் தசைக்கு குருதி வழங்கும் முடியுரு நாடிகள் (Coronary Arteries) ஒட்சியேற்றப்பட்ட குருதியைத் தேவையான அளவு வழங்குவதன் மூலம் இத யத்தை ஆரோக்கியமாகப் பேணுகின்றன. இரத்தக் கட்டி அடைத்தல், கொலஸ்ரோல் படிவு, முடியுரு நாடியின் சுவரில் ஏற்படும் சுருக்கம் என்பவற்றால் முடியுரு நாடியில் இரத்தோட்டம் தடைப்படுவதால் முடியுரு நாடியால் குருதி வழங்கப்படும் இதயத்தின் தசைப்பகுதியில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனால் அப்பகுதி நிரந்தரமான பாதிப்புக்கு உள்ளாகின்றது. இந்நிலையே மரடைப்பு ஆகும்.

**மாரடைப்பு ஏற்படுவதைத் தூண்டும் காரணிகள்**

**1. மாற்றமுடியாத காரணிகள்**

வயது, பால் (sex), குடும்பத்தில் நெருங்கிய உறவினர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருத்தல்.

**2. மாற்றக்கூடிய காரணிகள்**

குருதியில் அதிகரித்த கொழுப்பின் அளவு, சிகரெட் புகைத்தல், உயர் குருதியமுக்கம், நீரிழிவு, போதிய உடற்பயிற்சி இன்மை, உடற்பருமன், சில வகை மருந்துகள் (உ+ம்:- கர்ப்பத்தடை மாத்திரைகள்), அதிக மதுபாவனை

**மாரடைப்பின் அறிகுறிகள்**

நெஞ்சுப் பகுதியில் மிக இலேசான அசௌகரியம் முதல் கடுமையான நெஞ்சுவலி வரை அறிகுறிகள் வேறுபடலாம். நடுநெஞ்சுப் பகுதியில் மார்பெலும்புக்குப் பின்னால் பாரமான அல்லது இறுக்குவது போன்ற அல்லது எரிவுத் தன்மையான வலி ஏற்படும். இவ்வலி கைகள், கழுத்து, தாடை, முதுகு, மேல்வயிறு நோக்கிப் பரவலாம். அல்லது இவற்றில் ஏதாவது ஓர் இடத்தில் மட்டும் ஏற்படலாம். இத்துடன் வயிற்றுப்பிரட்டல், வாந்தி, அதிக வியர்வை, மூச்சு விடுவதில் சிரமம் என்பனவும் ஏற்படலாம். சிலர் இவ் அறிகுறிகளை சமிபாட்டுக்குறைவு என்று தவறாகப் புரிந்து கொள்கின்றனர்.

சிலரில் வலி இல்லாமலும் மாரடைப்பு ஏற்படலாம். இந்த நிலை பொதுவாக நீரிழிவு நோயாளிகளில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் உடனே வைத்தியசாலைக்குச் சென்று முறையான வைத்திய பரிசோதனைகளுக்கும் ECG மற்றும் குருதிப் பரிசோதனைக்கும் உட்படுவதன் மூலம் மாரடைப்பு ஏற்படவில்லலை என்பதை உறுதி செய்வதே பாதுகாப்பானதாகும். நெஞ்சு நோவுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் ஒருவருக்கான சிகிச்சை முதலில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு விரைவான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

வைத்தியரும் தாதி உத்தியோகத்தரும் நோயாளியின் குணங்குறிகளையும் நோய் பற்றிய சரிதையையும் அறிந்து கொள்கின்றனர். தேவையான உடற்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ECG மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது. இதே நேரத்தில் வலி நிவாரணிகள், ஒட்சிசன் என்பனவும் வழங்கப்படுகின்றன.

மாரடைப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் நோயாளி இதய சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது. மாரடைப்பு ஏற்படும் முதல் 48 மணிநேரத்துக்கு மீண்டும் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதாலும் இதயத் துடிப்பில் சீரற்ற நிலை ஏற்பட்டு உயிர் ஆபத்து நிகழலாம் என்பதாலும் நோயாளி அதிதீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்.

ECG மற்றும் குருதிப்பரிசோதனைகள். நோய் நிர்ணயத்தில் உதவுதல். மாரடைப்பு ஏற்படும் போது ECG யில் பிரத்தியேகமான சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம் மாற்றங்களைக் கொண்டு முடியுருநாடிகள் பகுதியாகவோ அல்லது முற்றாகவோ தடைப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும்.


குருதிப்பரிசோதனையின்போது நோயாளியின் குருதியில் உள்ள Troponin என்ற புரதத்தின் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றது. இப்புரதம் சாதாரணமாக இதயத்தசைக் கலங்களின் உள்ளே காணப்படுகின்றது. இதயத்தசை பாதிப்புக்குள்ளாகும் போது இப்புரதம் குரு திக்குள் விடுவிக்கப்படுகின்றது. Troponin குருதிப் பரிசோதனை Positive ஆயின் அது இதயத்தசை சேதமடைந்திருப்பதை உறுதி செய்கின்றது. குருதியில் உள்ள அதிகரித்த Troponin அளவைப் பாதிப்பு நிகழ்ந்து 4-6 மணிநேரத்துக்குள் கண்டறிய முடியும்.

இது தவிர இதயத்தசைக் கலங்களின் உள்ளே காணப்படும் வேறு சில நொதியங்களின் அளவைக் குருதியில் அளவிடுவதன் மூலமும் இதயத்தசையில் சேதமேற்பட்டிருப்பதை உறுதிப்படுத்த முடியும். மாரடைப்பு ஏற்பட்டது உறுதி செய்யப்பட்ட பின்னர் சிகிச்சை அளித்தல் இரத்த கட்டியைக் கரைப்பதற்கான **Thrombolysis** மருந்து உட்செலுத்தப்படுகின்றது. இம்மருந்து இரத்தக் கட்டியைக் கரைத்தால் தடைப்பட்டிருந்த முடியுருநாடியின் குருதியோட்டம் சீர் செய்யப்படுகின்றது. இதனால் இதயத் தசையில் பாதிக்கப்பட்ட பரப்பளவு மட்டுப்படுத்தப்படுவதுடன் அதன் அயற் பகுதிகளோ அல்லது அந்த முடியுரு நாடியால் குருதி வழங்கப்படும் இதயத்தின் மற்றைய பகுதிகளோ பாதிக்கப்படுவது தடுக்கப்படுகின்றது. அத்துடன் அடுத்தடுத்த மாரடைப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகின்றது.

இந்தச் சிகிச்சை முறை மாரடைப்பு ஏற்பட்டு முதல் 12 மணித்தியாலயத்திற்குள் வழங்கப்படின் மிகவும் நற்பயன் அளிக்கக்கூடியதாகும். அதிலும் மாரடைப்பு ஏற்பட்டு ஓரிரு மணி நேரத்திற்குள் வழங்கப்படின் இரத்தக்கட்டி முற்றாகக் கரைவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகம். இதனால் உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவடைகின்றது. எனவே நெஞ்சு நோ ஏற்பட்ட உடனே வைத்தியசாலையை அணுகுதல் நோயாளியின் நலனைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான விடயமாகும்.

இந்த வகையான சிகிச்சை முறை யாழ். மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை என்பவற்றில் மட்டுமே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர இதயத் தொழிற்பாட்டை மேம்படுத்துதல், இதயத்துடிப்பு வேகத்தையும் குருதி அமுக்கத்தையும் குறைப்பதன் மூலம் இதயத்தசையின் வேலைப் பளுவைக் குறைத்தல், குருதியிலுள்ள கொழுப்பின் அளவைக் குறைத்தல், குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவை மட்டுப்படுத்துதல் என்பவற்றுக்குரிய மருந்துகள் வழங்கப்படுகின்றன.



அத்துடன் ஆரோக்கியமான உணவு, பழக்கவழக்கங்கள் பற்றி ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

**மாரடைப்புக்கான சிகிச்சையில் Echo Cardiogram இன் பங்கு**

அதிவேக ஒலியலைகள் செஞ்சறைக்கூட்டினூடாக இதயத்தினுள் செலுத்தப்படுகின்றன. இதன் மூலம் இதயத்தின் அறைகளின் அளவு, இதயத்தசையின் தடிப்பு, இதயத்தின் தொழிற்பாட்டுத்திறன், இதய அறைகளில் சுவர்களின் சுருக்கத்தில் ஏற்பட்ட பாதிப்பு, வால்புகளில் ஏற்பட்ட பாதிப்பு, இதயத்தினுள் இரத்தக் கட்டி காணப்படுகின்றதா இதயத்தைச் சுற்றி திரவம் காணப் படுகின்றதா, போன்ற விடயங்களைக் கண்டறிந்து அவற்றுக்கான சிகிச்சையை விரைவாக ஆரம்பிக்கலாம்.

**Exercise ECG செய்யப்படுவதன் நோக்கம்**

மாரடைப்பு ஏற்பட்டு 6 வாரங்களினுள் **Exercise ECG** மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது உடற்பயிற்சியில் ஈடுபட்ட நேரத்தையும் அப்போது **ECG** இல் ஏற்பட்ட மாற்றத்தையும் கொண்டு இதயத்தில் ஏற்பட்ட பாதிப்பின் அளவை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு இனங் காணப்பட்ட நோயாளிகளுக்கு **Coronary Angiogram** பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

**Coronary Angiogram என்றால் என்ன?**

இரத்தக் குழாயினுள் விசேட சாயமூட்டியைச் செலுத்தி இதயத்தின் முடியுரு நாடிகளின் இரத்தோட்டத்தை அறிதலாகும். இதன் மூலம் பெறப்படும் படங்கள் முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகளின் அளவு, அமைவிடம், அதன் தீவிரத்தன்மை பற்றித் துல்லியமாக தெளிவுபடுத்துகின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நோயாளியினதும் இதயநோயின் தாக்கத்திற்கு ஏற்றவாறு சிகிச்சை முறைகள் தெரிவு செய்யப்படுகின்றன. அவையாவன.

Medication – மருந்து மூலமான சிகிச்சை

**Balloon Angioplasty and surgery stenting**

**Coronary artery – by- pass surgery**

மனதிற் கொள்ள வேண்டியவை

மாரடைப்பு உயிராபத்தானது.

மேற்கூறிய குணங்குறி உடையவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று **ECG** பரிசோதனைகள் மேற்கொண்டு மாரடைப்பு இல்லையென்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

மாரடைப்பு ஏற்பட்டவுடன் வைத்தியசாலையை அணுகுவதன் மூலம் மாரடைப்பால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

**மருத்துவர் :- எம்.குருபரன்,**
**இதய சிகிச்சை நிபுணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணிந்து நில்

முள் தரித்த
பலாக்கனியில்
சுளையது பிரிப்போர்
சுவை தெரிவார்.

முள் குத்தும்
பாலொட்டுமெனப்
பார்த்து நின்றுவிடில் பயனறியார்.

படைப்பிது
வாழ்விது
இதுவே
கடிது நீக்கிக்
கழித்திடுக்கக்
கற்றிடு.

வலித்தாலும்
வானுயர்ந்த பட்சி
சலிக்காது
இறக்கை மடிக்காது
இலக்கையடையும் வரை.

இறங்காது தரையிலது
இறப்பினும் இறங்காது.

இளைப்பாற இடமில்லை இதுவறியும்
இருக்குமென்ன
இடம்பெயர
இனம்பெருக்க
இயன்றவரை
முயன்று நிற்கும்.

இறந்ததை இரந்துண்டதில்லை இராஜாளிகள்.


துணிந்த வேட்டையில்
விரும்பி உண்டு
வீசிப் போகும்
வீரமோ வீரமது.

பறவை கண்டு
விமானம் படைத்தவா!
அதனைக் கண்ட
வீரம் படைக்கவா.

*பிரம்மியா,*
*சண்முகராஜா.*

## தொலைந்த என் வாழ்க்கை

பெண்ணே! காதல் தந்தாய் கண்களில் கனவுகள்
தந்தாய் நொடிப்பொழுதில் என்
மனதைத் திருடி ஓடி
விட்டாய்
பூவாய் பூத்தாய் என்னைக் காயாய்
காத்தாய்
தாகமெடுக்கும் நேரமெல்லாம் நீ நீராய் ஆனாய்
தூக்கத்தில் உளறினேன் உன்னைக் காணாத
போது பதறிப் போனேன்
நான்கு வருடக் காதலை நீ ஒரு கணப்பொழுதில்
உதறிச் சென்றாய்
உன்னை இழந்த நான் உலகத்தில் உயிரை இழந்து
ஒரு உடல் போல் ஆனேன்
மண்ணில் அனலில் விழுந்த ஒரு புழுவாய்த்
துடித்தேன் தவித்தேன்
இன்று என் காதல் தோட்டத்திலே என்
வாழ்க்கையைத் தொலைத்து
நிற்கின்றேன் நான் ஒரு தனிமரமாய்.



சுப்பிரமணியம் ஜெயருபன்,
பருத்தித்துறை.


## கருணைத் தெய்வம்



வெடுக்குநாறி மலையில் வாழும் ஆதிலிங்கமே - நாம்
மிடுக்குடனே வாழ்ந்திடவே அருளும் தெய்வமே
காட்டினிலே இருந்தாலும் கருணைத் தெய்வம்
நீ காட்டுகின்ற கருணையினால் உலகமுய்யும்
பாட்டினிலே உன் புகழைச் சொல்ல வேண்டும்
பரவசமாய் உடுக்கடித்து ஆட வேண்டும்
சொத்தெனவே மலையினிலே அமர்ந்தவரே - பல
சித்தர்களை, ஞானிகளைக் கண்டவரே
தொல்பொருள் திணைக்களத்தின்
தொல்லைகள் எம்மைச் சீண்ட
எல்லையில் நின்றோம்
ஏக்கமே வாழ்வாய்ப் போச்சு
கல்லினில் சிலை வடித்து வாழ்ந்த காலத்தை
அதில் பொறித்து
வாழ்ந்தார்கள் எம் முன்னோர்கள்
அல்லும் பகலும் அரனே துணையாக
காலம் மாறும் களங் கண்ட எம்மவரின்
ஆளுமைக்கு வரும் அதுவரை
ஆவலுடன் காத்திருப்போம்.

கணே-பாக்கியன்.

## மௌனத்தின் தேடல்-606



### மறக்க முடியவில்லை

வெளிநாட்டில் வேலைவாய்ப்பாம்
ஆய்வுகூடத்தில்
ஆராய்ச்சி வேலை
உணவு, தங்குமிடம் இலவசம்
ஐம்பதினாயிரம் சம்பளம் ஆனாலும் எம்
கூட்டத்தினருடன் கூடி விளையாடியதை
நினைக்க மனம் வேதனையடைகிறது.


திருமதி.ஜெ.விஜயநிர்மலா.
சங்கத்தானை.

## முதன்மைக்கு உயிர் வதை

மேலாதிக்க வெறி கொண்ட
மானிட வர்க்கம்
எம் மூதாதை இனத்தை மட்டுமல்ல
ஜீவராசிகளனைத்தையும்
இயல்பாய் வாழ விடாது
ஆய்வென்ற பெயரில்
இடர்களைச் செய்து
தானே முதன்மையானவனென
நிரூபிக்க அரக்கத்தனமாய்
செயல் பல புரிகிறது.

சி.இ.அன்புதுரை.
சம்மட்டிஓலை, மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 607



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நாங்கள் அல்ல...

நாங்கள் சீனா புறப்படுகின்றோம்
நாளை நாய்கள் தைவானுக்கா
நாடு பஞ்சப்பட்டதற்குக் காரணம்
நாங்கள் அல்ல நீங்கள் தான்.

பி.மதுஷ்சன்.
தையிட்டி.

## எதிர்பார்ப்பு

நாட்டில் குரங்குகளை
ஏற்றுமதி செய்தால்
விவசாயிகளது
அழிவுகளின் பாதிப்புகள்
நீங்கிட வழி
பிறக்குமா?

தங்கத்தமிழன்.
காரைநகர்.

## மீட்சி இல்லை

குரங்கு கையில் பூ மாலை
சீனாவின் கையில் குரங்கு
இரண்டுக்கும் மீட்சி இல்லை...

பிரகவி. கொக்குவில்.

## குரங்குகளின் குமுறல்

ஒற்றை ஆட்சியின் கீழ்
ஓர் இனத்தையே அழித்தொழித்த
அடக்குமுறையாளர் ஆட்சியில்
அற்ப பிறவிகளாய் நாங்கள்
அகப்பட்ட உடைமைகளை கையிலேந்தி
அநாதையாக்கப்படுவது - பெரும்
விசித்திரமல்ல - வேதனையே.

சாந்தையூர் விஸிஸ், பண்டத்தரிப்பு.

## பயணங்கள் முடிவதில்லை

ஆண்டவனே ஆஞ்சநேயா
சீதாப்பிராட்டி தேடி லங்காபுரி வந்தாய்
அறிவு இல்லா அரசு உன் படைதனை
சீர்கெட்ட சீனாவிற்கு அனுப்புவதுதான் ஏனோ?

கும்பவாழியான். உடுப்பிட்டி.

## குரங்குகளின் குரல்

பயிரழித்த குற்றம்
பூங்காய் பார்வைக்கென
பொய்யுரைக்கா நம்மினத்தை
நாடு விட்டுத் துரத்துகின்ற
நம் நாட்டுத் தலைவர்களே!
நாளையிந்தக் கொடுமைக்கு
நல்ல தீர்ப்பு வரும்
தேர்தல் வரை காத்திருங்கள்.

விஜோதராஜ் விஜுஜா,
இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு நடுத்தர வணிகர்கள் வெற்றி பெற



சிறு மற்றும் நடுத்தர வணிக உரிமையாளர்கள் செய்யும் பொதுவான தவறு ஒன்று உள்ளது. அது, தனிநபர் வரவு செலவையும் வியாபார வரவு செலவையும் ஒன்றாகக் கலப்பது. 'என் பணம், என் வியாபாரம், ஏன் கலக்கக் கூடாது?' என்று உங்களுக்குத் தோன்றலாம். இப்படிச் செய்யும் போது, 'அடிப்படையில் எது என் பணம், எது வியாபாரத்தின் அல்லது நிறுவனத்தின் பணம்' என்ற ஒரு குழப்பத்தை உண்டாக்கும். வரவு -செலவைக் கண்காணிப்பது, கணக்கு எழுதுவது, வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்வது என்று பலவற்றையும் இது கடினமாக்கும். சமயங்களில் தனிநபர் மற்றும் நிறுவன சொத்துகளை ஆபத்தில் கொண்டுசென்று விடும் அபாயமும் இருக்கிறது.

### நீங்கள் வேறு, உங்கள் நிறுவனம் வேறு

உங்கள் பணத்தையும் நிறுவனத்தின் பணத்தையும் வேறுபடுத்தி வைக்க வேண்டும். நன்றாக யோசித்துப் பாருங்கள்... உங்கள் பணத் தேவையும் உங்கள் நிறுவனப் பணத் தேவையும் ஒன்றாக இருக்கிறதா? உதாரணமாக, உங்களுக்கு ஒரு சட்டை தேவைப்படும். ஆனால், உங்கள் நிறுவனத்திற்கு மூலப்பொருட்கள் தேவைப்படும். இப்படியாகப் பல்வேறு தேவைகளைச் சொல்லலாம். உங்கள் பணத்தை வியாபாரத்தின் பணமாக நினைத்தால், பின்பு உங்களுக்கு என்று பணம் இருக்காது. மாறாக வியாபாரத்தின் பணத்தை உங்கள் பணமாக நினைத்தால் வியாபாரத்திற்குப் பணம் இருக்காது. ஆக, நீங்கள் வேறு. உங்கள் நிறுவனம் வேறு.

### உங்கள் சம்பளம் எவ்வளவு?

'நான் முதலாளி, எல்லாப் பணமும் என்னோடதுதான். எனக்கு எதுக்கு சம்பளம்?' என்று கேட்கத் தோன்றும். ஆனால், நீங்கள்தான் உங்கள் நிறுவனத்தின் முதல் தொழிலாளி. மற்ற தொழிலாளர்களைப் போல் நீங்களும் உங்கள் நேரத்தையும் திறமையையும் உங்கள் நிறுவனத்திற்காகச் செலவிடுகிறீர்கள். மற்ற தொழிலாளர்களைப் போல் உங்களுக்கும் சம்பளம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், வருடம்தோறும் லாபத்தின் ஒரு பங்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்கள் பணத் தேவைகளையும் குடும்பத்தினரின் பணத் தேவைகளையும் கவனித்துக் கொள்ள முடியும்.

### உங்கள் வியாபாரம் தடுமாறும் போது நீங்கள் தடுமாறக்கூடாது!

உங்கள் வியாபாரம் தடுமாறும் போது கூட, உங்களால் உங்கள் உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிய வேண்டும். அப்போதுதான் உங்கள் வியாபாரத்தை முன்னேற்ற, கவலையின்றி உற்சாகமாகப் பாடுபட முடியும். உங்கள் வியாபாரம் தடுமாறும் போது நீங்கள் தடுமாறாதீர்கள்.

'எல்லாம் சரி. ஆனாலும் என் பணம் எது, என் வியாபாரத்தின் பணம் எது என்று எப்படிப் பிரிப்பது?' என்பவர்களுக்கு இந்த 5 வழிமுறைகள்...

■ தனித்தனி வங்கிக் கணக்குகள்: நிறுவனத்திற்கும் உங்களுக்கும் தனித்தனி வங்கிக் கணக்குகளை ஆரம்பியுங்கள். நிறுவனக் கணக்கில் நிறுவன வரவு செலவையும் உங்கள் சேமிப்புக் கணக்கில் உங்களுக்கான தனிப்பட்ட வரவு செலவையும் செய்திடுங்கள். இதனால் எது உங்கள் பணம் எது நிறுவனப் பணம் என்ற தெளிவு கிடைக்கும். வியாபாரத்தின் லாப, நட்டத்தையும் மிகச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும்.

■ பட்ஜெட் போடுங்கள்: நிறுவனத்திற்கென்று வாடகை, மின்சாரக் கட்டணம் மற்றும் இதர செலவுகளை உள்ளடக்கிய பட்ஜெட்டை உருவாக்குங்கள். அனைத்துச் செலவுகளையும் சரிவர குறித்து வைத்து, அந்தச் செலவுகள் பட்ஜெட்டுக்கு உட்பட்டுதான் நடக்கின்றனவா என்று அவ்வப்போது கண்காணியுங்கள். அதேபோல உங்களுக்கென்றும் ஒரு தனிபட்ஜெட்டைப் போட வேண்டும்.

■ சம்பளம் பெற்றுக் கொள்ளுங்கள்: உங்கள் சம்பளத்தைத்தான் நீங்கள் உங்களுக்கென்று தொடங்கிய வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும். உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் ஆன அனைத்துத் தேவைகளுக்கும் உங்கள் சம்பளத்தில் இருந்துதான் செலவிட வேண்டும்.

■ தனித்தனிக் கடன் அட்டை: நீங்கள் கடன் அட்டை உபயோகிக்கும் தொழில்முனைவோர் என்றால், உங்களுக்கு ஒன்று, நிறுவனத்திற்கு ஒன்று என்று தனித்தனிக் கடன் அட்டை வாங்கிவிடுங்கள்.

■ கணக்காளரிடம் ஆலோசியுங்கள்: ஒரு நல்ல கணக்காளரிடமோ, பட்டய கணக்காளரிடமோ தனிநபர் நிதியையும் நிறுவன நிதியையும் எப்படிச் சிறப்பாகப் பிரித்துக் கையாள்வது என்று ஆலோசனைகள் பெறுங்கள்.

நீங்கள் உங்கள் வியாபாரத்திற்காகக் கடினமாக உழைக்கிறீர்கள். ஆனால் தனிநபர் வரவு -செலவையும் வியாபார வரவு- செலவையும் ஒன்றாகக் கலப்பதன் மூலம் வியாபாரத்தின் வெற்றி,தோல்விகளை அறிந்துகொள்ள முடியாமல் போகிறது. உங்கள் உழைப்பு விழலுக்கு இறைத்த நீரா அல்லது கனி தரும் மரமா என்று தெரிந்துகொள்ள, மேலே சொன்ன வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். உங்கள் வியாபாரத்தின் வெற்றி, தோல்விகளைச் சரியாகக் கண்டறிந்து முன்னேற்றப் பாதையில் சென்றிடுங்கள்.

'ஆயிரம் எண்ணங்களை விட ஒரு சொல் மேலானது' என்றார் புத்தர். ஒருவரைப் பற்றி நம் மனத்துக்குள் எவ்வளவு இரக்கப்பட்டாலும் அதை அப்படியே வைத்துக் கொண்டிருந்தால் எதிராளிக்கு அது ஆறுதலை அளிக்காது. மாறாக, ஒரே ஒரு சொல்லை இனிமையாக உதிர்த்தால், அது காயம்பட்டவருக்கு வலியை மட்டுப்படுத்தும். அதேபோல், 'ஆயிரம் சொற்களை விட ஒரு செய்கை மேலானது' என்றும் புத்தர் சொன்னார். காரணம், செய்கைகளின் மூலமாகத்தான் பெரிய உண்மைகளை விளங்கச் செய்ய முடியும். சொற்கள் செய்யாததைச் செயல்கள் செய்யும். ஆம்... ஆயிரம் ஆறுதல் சொற்களை உதிர்ப்பவனை விட, காயத்துக்கு மருந்து தடவுபவனே மகத்தானவன் என்பதே புத்தர் தரும் விளக்கம். குருவின் வழிகாட்டல் இப்படித்தான் இருக்கும்.

குரு எனும் ஸ்தானத்துக்கு இந்தப் புண்ணிய பூமியில் எப்போதும் உயர்ந்த மதிப்பு உண்டு. தத்துவ மேதை அரிஸ்டோட்டிலிடம் சீடனாக வந்து சேர்ந்தான் சிறுவன் ஒருவன். ஒருநாள் இருவரும் வெளியூருக்குப் பயணப்பட்டார்கள். அரிஸ்டோட்டில் கம்பீரமாக முன்செல்ல, சிறுவன் அவரைப் பின்தொடர்ந்தான்.

வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. உடனே, 'குருவே... முதலில் நான் ஆற்றில் இறங்கி நடக்கிறேன். நீங்கள் என்னைப் பின் தொடருங்கள்" என்றபடி அரிஸ்டோட்டிலின் பதிலை எதிர்பாராமல், ஆற்றில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். அவனைத் தொடர்ந்து அரிஸ்டோட்டிலும் ஆற்றில் இறங்கினார். இடுப்பளவு நீரே இருந்ததால் இருவரும் சுலபமாக ஆற்றைக் கடந்து கரையேறினர்.

இருந்தாலும் அரிஸ்டோட்டிலுக்குக் கோபம். 'குருவை அவமதித்து விட்டாயடா நீ" என்று சீடனிடம் சீறினார்.

# உங்களுக்கு குரு நீங்கள் தான்

"எவ்வகையில் அவமதித்து விட்டேன் குருவே"
- பணிவுடன் கேட்டான் சிறுவன்.

'சீடனாகிய நீ... எப்போதும் எனக்குப் பின்னால்தானே வர வேண்டும். நான் பதில் சொல்வதற்குள், என்னை முந்திக்கொண்டு ஆற்றில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டாயே!" என்றார், கோபம் தணியாத அரிஸ்டோட்டில்.

இதற்குச் சிறுவன் பதிலளித்தான் 'குருவே... ஆற்றின் ஆழம் எவ்வளவு என்று நமக்குத் தெரியாது. இந்த நிலையில், நீங்கள் முதலில் ஆற்றில் இறங்கி... உங்கள் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் என்ன செய்வது? என்னைப் போன்ற சீடர்கள் பலர் கிடைப்பார்கள். ஆனால், உங்களைப் போன்ற குரு ஒருவர் கிடைப்பது அரிது. எனவேதான் ஆற்றின் ஆழத்தையும் வெள்ளப்போக்கையும் தெரிந்து கொள்ள முதலில் நான் இறங்கி நடந்தேன். என் உயிரைவிட தாங்களே எனக்கு முக்கியம்" என்றான். அவன் உள்ளத்தை அறிந்த அரிஸ்டோட்டில், கட்டி அணைத்துப் பெருமிதம் கொண்டார். குருபக்தியில் சிறந்த அந்தச் சிறுவனே, பிற்காலத்தில் உலகில் பல நாடுகளை வென்று வெற்றிக்கொடி நாட்டிய மாவீரன் அலெக்சாண்டர்.

சாணக்யனை குருவாகப் பெற்ற சந்திரகுப்தனுக்குப் பேரரசு பரிசாகக் கிடைத்தது. அதேபோல்தான் விஜயநகரப் பேரரசை நிர்மாணித்த ஹரிகர புக்கரருக்கு வித்யாரண்யரும் மராட்டிய மன்னன் வீரசிவாஜிக்கு சமர்த்த ராமதாசரும் குருவாக வாய்த்தனர். மாமன்னர்கள் மட்டுமன்றி, குருவருளால் திருவருள் பெற்ற சாமான்யர்களும் எண்ணற்றோர் உண்டு.

'எவரைத் தெரிந்துகொண்டால் எல்லாம் தெரிந்துவிடுமோ, அவரைத் தெரிந்து கொள்' என்கிறது பாகவதம். கடவுளை அறிதல் எனும் இலக்கைச் சுட்டிக்காட்டுகிறது. அதற்குக் குருவின் திருவருள் தேவை. குரு ஒருவரைச் சந்தித்த சீடன் கேட்டான்: 'சுவாமி... இறைவனை உடனே காண வேண்டும். அதற்கு 'ஒரு வழி சொல்லுங்களேன்." குரு புன்னகைத்தபடி கூறினார்: 'சீடனே! இறைபக்தி என்பது சீன மூங்கில் போன்றது. இந்த மூங்கிலானது... விதையைப் போட்டு, வருடம் முழுவதும் நீரூற்றி, உரமிட்டுப் பாதுகாத்தாலும் பூமிக்கு மேலே ஓர் அங்குலம் கூட வளராது. ஆனால், ஐந்து வருடங்கள் பூர்த்தியானதும் ஆறே வாரங்களில் 90 அடி வரை வளரும்.

புதிதாக அதைக் காண்பவர்கள், 'அட... ஆறே வாரத்தில் இப்படியொரு வளர்ச்சியா?' என்று எண்ணக்கூடாது. ஐந்து வருடங்களாகத் தனது வேரை பூமிக்குள் பரப்பி, எவ்வளவு உயரம் வளர்ந்தாலும் வீழ்ந்துவிடாத அளவுக்குத் தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே, தனது வளர்ச்சியை வேகப்படுத்துகிறது அந்த மூங்கில். இறைபக்தியும் அப்படித்தான். மனம் தளராமல் இறைச் சிந்தனையில் பற்றுடன் இருந்தால், இறைவனை தரிசிப்பது உறுதி!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

**சதா** சர்வகாலமும் அரசியல் விவகாரங்களில் சிக்கி, கொள்ளையர்களைப் பிரித்து வைப்பதிலும் வேண்டாதவர்களைத் தீர்த்துக் கட்டுவதிலும் பூர்வக்குடிகளைத் திருப்தி செய்து அக்ஷயமுனையில் தனது ஆட்சியைத் திடப்படுத்திக் கொள்வதிலுமே தான் புத்தியைச் செலவிட்டு வந்ததையும் தன் இல்லத்தில் தன்னிடம் வயது வந்த பெண் வளர்ந்து பருவத்தை எட்டியதைத் தான் அடியோடு அசட்டை செய்து வந்ததையும் நினைத்துப் பார்த்த பலவர்மன், மகளுக்குத் தான் செய்த பெரும் அநீதியை நினைத்துப் பார்த்தான்.

சொர்ணபூமித் தலைநகரான ஸ்ரீவிஜயத்துக்குத் தான் சென்ற சமயங்களில்கூட அவளை அழைத்துச் சென்று நாகரிக சமூகத்தைக் காட்ட முயலாமல் அக்ஷயமுனையில் தோழிகளிடமும் செவிலித் தாயிடமுமே விட்டுப் போனதையும் அவளுக்குப் பழக்கமெல்லாம் கொள்ளைக்காரர்களிடமேயென்பதையும் எண்ணிப் பார்த்து பலவர்மன் நாகரிகம் கொழிக்கும் ஸ்ரீ விஜயத்தை எட்டிப் பார்க்காத அந்தக் காட்டுப் புஷ்பத்தை பிறநாட்டு வீரனொருவன், அதுவும் தான் அறவே வெறுக்கும் தமிழர்களின் தலைவனொருவன் பறிக்க வந்து, அவன் கையை நோக்கி அந்தப் புஷ்பம் சாய்கிறதென்றால் அதற்குக் காரணம், தான் வளர்த்த முறையே என்ற முடிவுக்கும் வந்தான்.

இப்படி விடயங்களை நினைக்க நினைக்க ஏற்பட்ட விளைவை எண்ணிப் பார்க்க பார்க்க, பலவர்மனுக்கு மஞ்சளழகியின் காதலில் அதிக தவறு எதுவும் இருப்பதாகப் புலப்படவில்லை. மகாவீரனொருவனை, உயர்குடி மகனொருவனை மஞ்சளழகி விரும்புவதிலோ, வதுவை செய்து கொள்வதிலோ தவறு ஏதுமில்லை என்றே தீர்மானித்தான் அவன்.

ஆனால் மஞ்சளழகிக்கு இருக்கும் பெரும் காதல் இளையபல்லவனுக்கும் இருக்குமா என்பது மட்டும் பெரும் சந்தேகம் முளைத்தது பலவர்மன் இதயத்தில். நடன நிகழ்ச்சியின் போது இளையபல்லவன் சற்று நிதானத்தை இழந்து மேடையை நோக்கி விரைந்தானானாலும் அதற்குக் காரணம் ஆழ்ந்த காதல் என்று கூற முடியாதென்றே பலவர்மன் நினைத்தான்.

அன்றைய காலையில் முதன்முதலாக மஞ்சளழகியைச் சந்தித்த சமயத்தில் அவள் அழகைப் பார்த்து இளையபல்லவன் மலைத்தானானாலும், அவன் நினைப்பெல்லாம் தன் உதவியைப் பெறுவதிலேயே இருந்ததையும் தனக்கு ஏதாவது தீங்கு நேரிட்டால் அகூதா வாங்கக்கூடி பழியைச் சுட்டிக்காட்டி மிரட்டியதையும் நினைத்துப் பார்த்த பலவர்மன், மஞ்சளழகியைக் கண்ட பிறகும் மனவலிமையை இழக்காதவன் அத்தனை எளிதில் அவளிடம் இதயத்தைப் பறிகொடுத்து மஞ்சளழகியை மணம் செய்து கொள்வதானால் இளையபல்லவனை விடச் சிறந்த மணாளனைத் தான் தன் மகளுக்குத் தேடிக் கண்டு பிடிக்க முடியாதென்று தீர்மானித்த பலவர்மன், அப்படி இளையபல்லவனை மட்டும் தன் மகளுக்கு மணாளனாக்க முடியுமானால் அக்ஷய முனைக் கோட்டையில் தன் பலமும் செல்வாக்கும் பன்மடங்கு உயர்ந்துவிடும் என்று எண்ணினான்.

இளையபல்லவனின் போர்த்திறனும் நிதானமும் அகூதாவிடம் அவனுக்குள்ள செல்வாக்கும், பூர்வக்குடிகளின் கொட்டத்தை அடியோடு அடக்க முடியுமென்பதில் பலவர்மனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை தவிர இளையபல்லவனுக்கே கோட்டையைக் காக்கும் பொறுப்பையும் கொடுத்துவிட்டால் அவன் ஸ்ரீ விஜயத்தின் படைத் தலைவர்களில் ஒருவனாகி விடுவான்.

அதனால் ஸ்ரீவிஜயம் பலப்படும். சோழர்களை எதிர்க்க நாம் ஒரு கோடரியையும் தயார் செய்தது போலாகும் என்று வஞ்சக எண்ணங்களை உருவாக்கிக் கொண்ட பலவர்மன், அந்த எண்ணங்களை எப்படிச் செயற்படுத்தலாம் என்ற சிந்தனையில் சில நிமிடங்கள் செலவிட்டான். திருமண யோசனையைத் திடீரென இளையபல்லவனிடம் வெளியிடுவது முட்டாள்த்தனமென்பதையும் மிகுந்த எச்சரிக்கையுடன் அவனைப் படிப்படியாகத் தனது வலையில் வளைக்க வேண்டுமென்பதையும் தீர்மானித்துக் கொண்ட பலவர்மன் தன் திட்டத்துக்கு மகளின் துணை தேட முயன்றான். ஆகவே மெள்ளத் தன் ஆசனத்திலிருந்து எழுந்து இடையே இருந்த மஞ்சத்தைச் சுற்றிச் சென்று ஆசனத்தின் பின்புறம் நின்று கொண்டு அவள் தலையை மெள்ள வருடிக்கொண்டே "குழந்தாய்! இல்லை, இல்லை, மஞ்சளழகி!" என்று அன்புடன் அழைத்தான்.

அவள் அதற்கு உடனே பதில் ஏதும் சொல்லவில்லை. சில விநாடிகள் மௌனம் சாதித்துவிட்டு பிறகு மெல்ல நகைத்தாள். ஏன் நகைக்கிறாய் என்று வினாவினான் பலவர்மன்.

மஞ்சளழகி குனிந்த தலை நிமிராமல் கேட்டாள், "என்ன? புதுப் பெயர் வைத்து அழைக்கிறீர்களே?" என்று.

"புதிய பெயராயிருந்தாலும் பொருத்தமான பெயர் தானே?" என்று மெள்ள அன்புடன் சொற்களை உதிர்த்தன அவன் உதடுகள்.

"உங்களுக்கும் அந்தப் பெயர் பிடித்திருக்கிறதா?" என்று வினவினாள் அவள். அதைக் கேட்டபோது அவள் குரலுக்கிருந்து குழைவைக் கவனித்தான் பலவர்மன். உங்களுக்கும் என்று அவள் ஒரு 'உம்'மையும் சேர்த்தன் பொருளும் அவனுக்குத் தெள்ளெனப் புரிந்தது. இளையபல்லவனுக்கு அந்தப் பெயர் பிடித்திருப்பதை அவள் அந்த 'உம்'மில் குழைத்துக் காட்டுகிறாளென்பதை அவன் உணரத் தவறவில்லை. ஆகவே சற்றுப் புன்முறுவல் கொண்டு, "ஆம், எனக்கும் பிடித்திருக்கிறது," என்று சொல்லி உம்மை அவனும் அழுத்தி உச்சரித்தான்.

"ஏன், உம்மை அப்படி அழுத்திச் சொல்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள் சற்றுச் சங்கடத்துடன்.

"இரண்டு பேருக்கும் அந்தப் பெயர் பிடித்தமாயிருந்தால்?" என்று பலவர்மன் லேசாக நகைத்தான்.

அந்த நகைப்பு அவளுக்குப் பெரும் சங்கடத்தை விளைவித்தது. தன் இதயத்தைத் தந்தை புரிந்துகொண்டுவிட்டார் என்ற பயமும் அவள் புத்தியில் உருவெடுத்தது. ஆகவே "இரண்டு பேரா!" என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டாள்.

"ஆம், இரண்டு பேர்தான்" என்றான் பலவர்மன் புன்முறுவலுடன்.

"யார் அந்த இரண்டு பேர்?"

"அவரும் நானும்"

"அவர் என்பது யார்?"

"உனக்கு வேண்டியவர்." யார் எனக்கு வேண்டியவர்?"

"மன்னர்."

"ஸ்ரீ விஜய சாம்ராஜ்ய மன்னரா?"

"இல்லை, இல்லை."

"வேறு மன்னர் ஏது?"

"உன் சாம்ராஜ்யத்தின் மன்னர்."

இதைச் சொன்னதும் சற்றுப் பலக்கவே சிரித்தான் பலவர்மன். அவள் பேச்சின் போக்கையும் முடிவில் ஏற்பட்ட சிரிப்பையும் சிறிதும் ரசிக்காத மஞ்சளழகி தனது தோளில் பதிந்து கிடந்த தன் தந்தையின் கையைத் தனது இடது கையால் பிடித்து உதறித் தள்ளியதன்றி, தலையைத் திடீரென நிமிர்ந்தி ஆசனத்தை விட்டுச் சரேலென எழுந்து பலவர்மனை நோக்கித் திரும்பினாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னியின் செல்வன்

## பாகம்-02

## திரைவிமர்சனம்

### சோழர்கள் மீண்டும் வென்றார்களா?

வானில்தோன்றும்தூமகேது.சோழகுல வேந்தர்களில் யாருக்குப் பாதகமாய் இருக்கப்போகிறது என்ற கேள்வியில் தொடங்கி, அது பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் கொல்ல நினைக்கும் பொன்னியின் செல்வனானஅருண்மொழிவர்மனாக இருக்கலாம் என்ற யூகத் தோடு முடிந்தது பொன்னியின்செல்வனின் முதல் பாகம்.

அருண்மொழிவர்மன் இறந்துவிட்டான் என்ற செய்திசுந்தரசோழ னின் குடும்பத்தில் துக்கத்தையும், சோழப்பேரரசில் குழப்பத்தையும் உண்டாக்குகிறது. இந்நிலையில், அருண்மொழிவர்மன் உயிரோடு தான் இருக்கிறான் என்ற ரகசியம், சுந்தரசோழனின் குடும்பத்துக் கும் எதிரிகளான பாண்டிய ஆபத்துதவிகளுக்கும் தெரியவருகிறது. அவரை மீட்க ஆதித்தகரிகாலன், குந்தவை உட்பட சோழ அரச குடும்பமும்,சோழவிஸ்வாசிகளும் களமிறங்க, மறுபுறம், சோழகுல த்தை அழிக்கச் சபதமேற்கும் நந்தினியின் உதவியுடன் பாண்டிய ஆபத்துதவிகள் சோழதேசத்துக்குள் களமிறங்குகிறார்கள். நந்தினி உண்மையில் யார், அவளின்சபதம்என்னவானது, சுந்தர சோழன்குடும்பத்திற்கு என்னவானது, பாண்டிய ஆபத்துதவிகள் அழிக்கப்பட்டார்களா, இறுதியில் வானில்தோன்றும்தூமகேது யாருக் குப் பாதகமாய்அமைந்தது போன்ற கேள்விகளுக்கு விடைகள் சொல் கிறது இரண்டாம்பாகம்.

முதல்பாகத்தில், சிறிதுநேரமே வந்தாலும் அழுத்தமான கதாபாத் திரமாக அமைந்தது விக்ரம் ஏற்றிருந்த ஆதித்தகரிகாலன்பாத்திரம்.



தவர், இந்த இரண்டாம் பாகத்தில் காதலியைச் சந்திக்கும் இடத்தில் நிதானத்தையும், அருண்மொழிவர்மனைச் சந்திக்கும் இடத்தில் பாசத் தையும், சோழதேசம்காக்கவிட்டுக்கொடுக்கும் இடத்தில்பொறு மையையும்சிறப்பாகவெளிப்படுத்தியிருக்கிறார். இதனாலேயேஇந்தப் படத்தில்ஆதித்தகரிகாலனைக்கூடுதலாகரசிக்கமுடிகிறது.

வந்தியத்தேவனிடம் இருக்கும் துடிப்பும், அருள்மொழிவர்மனிடம் இருக்கும் பொறுமையும், நம்பியிடம் இருக்கும் குறும்பும் சேட்டை யும், குந்தவையிடம் இருக்கும் சமயோஜிதமும், நிதானமும், ரவி தாசனிடம் இருக்கும் வெறியும் இந்தப்பாகத்திலும் அப்படியே குறைவின்றித் தொடர்கிறது. கார்த்தி, ஜெயம்ரவி, ஜெயராம், த்ரிஷா, கிஷோர் என அனைவரும் தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்திருக் கிறார்கள்

குறிப்பாக, முதல்பாகத்தைவிட இதில் ஜெயம்ரவியின் பாத்திரத்துக் குக்கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. புத்தபிட்சுகள் முன்னிலையில் அவர்தப்பிக்கும் காட்சி, அரண்மனைக்குள் நடக்கும் சண்டைக் காட்சி, க்ளைமாக்ஸ் போர்க்காட்சி என அனைத்திலும் தன் நூறுசதவிகித உழைப்பைக் கொடுத்திருக்கிறார்.

இந்த இரண்டாம் பாகத்தில், தன்பின்னணி இசையால், வாள்சுழற் றிநிற்கும் இசை அரசனாக மிரட்டியிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். முதற்பாகத்தில் வரும் பிரமாண்ட பின்னணிக்கோவைகளை அப் படியேபயன்படுத்தாமல், கொஞ்சம் புதுமைசேர்த்து ஒவ்வொரு காட் சியையும் செழுமைப்படுத்தியிருக்கிறார்.




கடம்பூர்மாளிகை, இலங்கை, பழுவூர்மாளிகை, தஞ்சைக்கோட் டை எனப்பல இடங்கள், பல கதாபாத்திரங்கள் தொடர்பில்லாமல் அடுக்கப்பட்டது போன்ற ஓர் உணர்வையே தருகின்றன. இதனால, பல கேள்விகளும், பார்த்திபேந்திரன்பல்லவன், மதுராந்தகன் ஆகியோரின் மனமாற்றங்களுக்குக் காரணங்கள் இருந்தாலும், அதற்கு ஏற்ற அழுத்த மான காட்சிகள் இல்லை. போரேபிரதானம் என்ற அவசரப்போக்கு, துண்டு துண்டான திரைக்கதை, லாஜிக்மீறல் கள் எனப் பயணித்து எட்டும் க்ளைமாக்ஸ், அதன் பின்வரும் உணர் வுபூர்வமான அந்த முடிசூட்டு விழாவைச் சம்பிரதாயச் சடங்காக மாற் றிவிடுகின்றன. அந்தத்தியாகமும், முக்கியமுடிவும் பார்வையாளர் களுக்கு எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்தக் குறைகளைப் பெரிதுபடுத்தாமல் கடந்தால், சிறப்பான மேக் கிங், நடிகர்களின பங்களிப்பு, சுவாரஸ்யமான கதை போன்றவற் றால் இந்தச் சோழ தேசப்பயணம் உற்சாகம் அளிக்கும் ஒன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நாடோடி
பாடியவர் : டி.எம். சௌந்தரராஜன், பீ.சுசீலா
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்



உலகமெங்கும் ஒரே மொழி
உள்ளம் பேசும் காதல் மொழி
ஓசையின்றிப் பேசும் மொழி
உருவமில்லா தேவன் மொழி

உலகமெங்கும் ஒரே மொழி
உள்ளம் பேசும் காதல் மொழி
ஓசையின்றிப் பேசும் மொழி
உருவமில்லா தேவன் மொழி

பறவை ஒன்று வர்ணங்கள் வேறு
பாட்டு ஒன்று ராகங்கள் வேறு
பறவை ஒன்று வர்ணங்கள் வேறு
பாட்டு ஒன்று ராகங்கள் வேறு
,ரவு ஒன்று பருவங்கள் வேறு
,ன்பம் ஒன்று உருவங்கள் வேறு

கடலும் வானும் பிரிந்து வைத்தாலும்
காதல் வேகம் காற்றிலும் ,ல்லை
உடல்கள் ,ரண்டு வேறுபட்டாலும்
ஒன்று காதல் அதன் பேர் தெய்வம்

உலகமெங்கும் ஒரே மொழி
உள்ளம் பேசும் காதல் மொழி
ஓசையின்றிப் பேசும் மொழி
உருவமில்லா தேவன் மொழி

ஒன்றே வானம் ஒன்றே நிலவு
ஓடிச் சென்ற ஆண்டுகள் கோடி
ஒன்றே வானம் ஒன்றே நிலவு
ஓடிச் சென்ற ஆண்டுகள் கோடி
காதல் பேசி கவிதையில் ஆடி
கணைகள் தேடி கலந்தவர் கோடி

கோடி மனிதர் பேசிய பின்னும்
குறைவில்லாமல் வளர்வது காதல்
நாடு விட்டு நாடு சென்றாலும்
தேடிச் சென்று சேர்வது காதல்
தேடிச் சென்று சேர்வது காதல்

உலகமெங்கும் ஒரே மொழி
உள்ளம் பேசும் காதல் மொழி
ஓசையின்றிப் பேசும் மொழி
உருவமில்லா தேவன் மொழி

# கிரிக்கெட்டின் கடவுளர்கள்

**"இந்தியாவில் கிரிக்கெட் என்பது ஒரு மதம். கிரிக்கெட் வீரர்களைப் பலர் கடவுளாகவே வணங்குகிறார்கள். அப்படிப் புகழ் பெற்ற கிரிக்கெட் கடவுள்கள் சிலர் பின்பற்றும் விசித்திர நம்பிக்கைகள் இங்கே..."**

**சச்சின் டெண்டுல்கர்**

கிரிக்கெட்டில் சச்சின் செய்த சாதனைகள் யாராலும் முறியடிக்க முடியாதவை. அவரது ஓட்டங்களை யார் ஈடு செய்தாலும் சுமார் 24 ஆண்டுகளாக ரசிகர்களுக்கு அவர் கொடுத்த மகிழ் தருணங்களை யாராலும் ஈடு செய்யமுடியாது. அப்படிப்பட்ட லிட்டில் மாஸ்டர் எப்போது விளையாடக் கிளம்பினாலும் சென்டிமென்ட்டாக தனது இடது கால் பாதுகாப்புப் பட்டையையே (Pad) முதலில் அணிவாராம் ஒருவேளை மாற்றி அணிந்தால் அணிக்கு அபசகுனம் என்று நினைப்பாரோ என்னவோ?



**வீரேந்திர சேவாக்**

சிங்கிள்னா என்ன... எனக்கு சிக்ஸர் மட்டும் தான் அடிக்கத் தெரியும் என டெஸ்ட் கிரிக்கெட்டின் ஆட்ட முறைக்கே ஆட்டம்காண்பித்தவர் சேவாக். வீரேந்திர என்கிற தன் பெயருக்கேற்ப வீர அடையாளமாக இருந்தவருக்கு ஜெர்சி அடையாள எண்கள்மீது பயம் கலந்த நம்பிக்கை இருந்தது. பல எண்கள் ராசியில்லாமல் போக, இறுதியில் எந்த எண்ணும் பொறிக்காத உடையிலேயே விளையாடியிருக்கிறார். 'நம்பர்ல ஒன்னும் இல்ல, என்னைய நம்புங்க' எனச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.



**சௌரவ் கங்குலி**

'திரியல் போர்கண்ட சிங்கம்' என்று கங்குலியை சொன்னால் மிகையாகாது. ஒரு அணிக்குள் நுழைந்து, தலைவனாக உயர்ந்து, வெற்றிக்காகப் போராடும் போராளிகளை உருவாக்கி நம்பர் 1 அணியாக இந்தியா வலம் வர முழுமுதற் காரணமானவர் இந்த வங்காளப் புலியின் விரல் களில் ஏராளமான நம்பிக்கை சார்ந்த மோதிரங்கள் இருந்ததுடன் விளையாடும் போது தன் குருவின் புகைப்படத்தையும் பாக்கெட்டில் வைத் திருப்பாராம். எல்லாப் புகழும் குருவுக்கே!



**ஜாகிர் கான்**

இந்திய கிரிக்கெட் அணியைத் தனது பந்து வீச்சின் மூலம் அரணாகக் காத்து நின்றவர் ஜாகிர்கான். சச்சினுக்குப் பிறகு 90ஸ் கிட்ஸ்களின் ஆதர்ச கிரிக்கெட்டர் இந்த கிங்கான். இடதுகை பேட்ஸ்மேன்களைப் பார்த்தால் 'ஜாலி' கான் ஆகிவிடும் ஜாகிர்கானுக்குப் பந்துவீசும் போது தன்னுடன் ஒரு மஞ்சள் துணி இருக்க வேண்டும். கடுமையாக உழைத்து 600 சர்வதேச விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய இவரது பெருமையை மஞ்சள் துணியும் பங்கு போட்டுக் கொள்கிறது.



**அனில் கும்ப்ளே**

1999இல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், ஒரே இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் ஒரே நபராகக் கைப்பற்றி சம்பவம் செய்தவர் கும்ப்ளே. 'ஜம்போ' என்று செல்லமாக அழைக்கப்படும் இவர் ஒவ்வொரு முறையும் பந்துவீச வரும் போது தனது தொப்பியையும் ஸ்வெட்டரையும் நடுவரிடம் தருவதற்குப் பதிலாக சச்சினிடம் கொடுத்து வருவதை ஒரு வழக்கமாக வைத்திருந்துள்ளார். நல்ல ராசியான கை என கும்ப்ளே நம்பியதில் தப்பேயில்லை.



**யுவராஜ் சிங்**

கிரிக்கெட்டின் எல்லா ஏரியாக்களிலும் ரவுண்டு கட்டி அடித்தவர் யுவராஜ். ஆறு பந்துகளில் ஆறு சிக்ஸர் என்றதும் நினைவுக்கு வரும் இந்தப் பஞ்சாப்சிங்கத்துக்கும் எண்களின் மீது தீவிர நம்பிக்கை உள்ளது.

எண் 12-ஐ ஜெர்சிக்குத் தேர்ந்தெடுத்ததன் பின்னணியில் பிறந்த நேரம் 12 மணி, 12 ஆம் மாதம் (டிசெம்பர்), 12ஆம் திகதி ஆகியவை இருக்கின்றன.

இதை 'Birthdate syndrome' எனச் சொல்கிறார்கள் கூடுதலாக ஒரு கொசுறு செய்தி, சண்டிகரில் உள்ள செக்டார் 12 இல் சிறு வயதில் வசித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY

NORTHERN UNI



SLIIT | NORTHERN UNI

# நாம் ஏன் யாழில்....

தற்பொழுது SLIIT இன் நான்கு வருட பட்டப்படிப்பினை யாழில் தொடரமுடியும்.
அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் வகுப்பறைகள்.

SLIIT மாலபே பீடாதிபதியின் நேரடித் தலைமையின்கீழ் அமைந்த தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழாம்

## School of Computing

**BSc (Hons) in Information Technology Specialising in:**

- Information Technology
- Data Science
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information System Engineering

## School of Business

**BBA (Hons) Specialising in:**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

பட்டப்படிப்பின் பின்னரான நிச்சயமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் பதிவு செய்யும் மாணவர்களுக்கு

## 25% அடிப்படையிலான 6 லட்சம்

வரையிலான பெறுமதி மிக்க புலமைப்பரிசில்கள்

க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களும் சித்தி இருந்தும் பட்டப்படிப்பினை தொடர முடியவில்லையா
உங்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய UGC அனுமதி பெற்ற பட்டப்படிப்பு எம்மிடம் இருந்து

NORTHERN UNI | 0771 471 471 | www.northernuni.lk | SLIIT UNI THE KNOWLEDGE UNIVERSITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-1987) Contact Us - NorthernUNI Enrollment Office, 5th Floor, Magicktech Building 218, 5/1 Stanely Road, Jaffna, Sri Lanka

# துன்புறுவது தொடருமா?


பாகிஸ்தானின் மிருகக்காட்சிச் சாலையில் யானையொன்று உயிரிழந்த சம்பவம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் இலங்கை பாகிஸ்தானிற்கு இரண்டு பெண் யானைகளை வழங்க முன்வந்துள்ளமை குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இரண்டு யானைகளை வழங்குமாறுகோரி பாகிஸ்தானில் உள்ள இலங்கை தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக பாகிஸ்தான் தூதரக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இரண்டு யானைகளை அனுப்பும் கராச்சிக்கும் லாகூரிற்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அருகிவரும் விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் ஆசிய யானைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பாகிஸ்தான் அந்த யானைகளை எவ்வாறான நிலையில் வைத்திருக்கப் போகின்றது என்பது குறித்த விபரங்களை வழங்க வேண்டும் என சூழல் விவகாரம் தொடர்பான சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யானைகள் மிருகக்காட்சிச் சாலையில் வைத்திருக்கப்படும் விதம் காரணமாக அவற்றின் உடல்நலத்திற்கு பாதிப்பு ஏற்படாது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.



எனினும் இரண்டு நாடுகளிற்கும் இடையில் யானைகளை பரிமாறிக்கொள்ளும் வழக்கம் உள்ளது. இது குறித்த முடிவுகளை ஜனாதிபதியே எடுக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜதந்திர பரிசுகளாக பெறப்பட்ட யானைகளை மோசமாக கையாளும் வரலாற்றை கொண்டது பாகிஸ்தான்.

1985 இல் இலங்கை பாகிஸ்தானிற்கு அனுப்பிய யானை விவகாரம் இதற்கு சிறந்த உதாரணம்.35 வருடங்களாக அந்த யானை போதிய வசதிகள் அற்ற இஸ்லாமாபாத் மிருகக்காட்சிச்சாலையில் வாடியது.

அதனுடன் காணப்பட்ட சஹெலி என்ற யானை இறந்த பின்னர் காவன் என்ற இலங்கை யானை உலகத்தின் மிகவும் தனிமையான யானை என வர்ணிக்கப்பட்டது.

பின்னர் சர்வதேச விலங்குகள் உரிமை அமைப்புகளும் கலைஞர்கள் சிலரும் மேற்கொண்ட முயற்சி காரணமாக நீண்ட சட்டசெயற்பாடுகளிற்கு பின்னர் அந்த யானை கம்போடியாவின் காடுகளிற்குள் அனுப்பப்பட்டது.

லாகூரில் உள்ள இலங்கை துணை தூதரக அதிகாரி வெளியிட்ட தகவல் குறித்து ரார் அமைப்பு கரிசனை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் யானைகளை பராமரிப்பதற்கான வளம் மற்றும் திறமைகள் தன்னிடம் இல்லை என்பதை பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது என ரார் அமைப்பு தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து பாகிஸ்தானிற்கு அனுப்பப்பட்ட சஹெலி மெனிகா என்ற யானை 23 வயதில் பரிதாபமாக உயிரிழந்தது என குறிப்பிட்டுள்ள இலங்கை அமைப்பு 1985 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட கரவன் என்ற யானை பொருத்தமற்ற வாழ்க்கை நிலைமைகள் மோசமான பராமரிப்பு போன்ற ஆதாரங்களின் அடிப்படையில் கம்போடியாவிற்கு அனுப்பப்பட்டது எனவும் தெரிவித்துள்ளது..

எனவே இதுபோன்ற நிலைமையை அனுபவிக்கும் மேலும் இலங்கை யானைகளை பாகிஸ்தானிற்கு அனுப்புவது குறித்து இலங்கை தூதரக அதிகாரி பரிசீலிப்பார் என்பது நினைத்துப்பார்க்க முடியாத விடயம் எனவும் தெரிவித்துள்ள இலங்கை அமைப்பு யானைகள் உணர்வுள்ள உயிரினங்கள் அவற்றை பொருளாக கருதி பரிசு கொடுக்க முடியாது இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் இலங்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளை இதனை மீள்பரிசீலனை செய்யுமாறும் உயிரிழப்பதற்காக யானைகளை அனுப்ப வேண்டாம் எனவும் நாங்கள் கேட்டுக்கொள்ளவுள்ளோம் எனவும் இலங்கையை சேர்ந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2819

சபானா





பிரியா




கவிதன்




தினேஷ்




ரித்மிகா

என்னங்க கிச்சன் ஜன்னலை
மூட மறந்திடாதிங்க..
பூனை வந்திடும்...
ஒரே ஒரு நாள் திறந்து வை டியர்...
அதுக்கப்புறம் அது வரவே வராது...

தருஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கருத்து சுதந்திரத்தின் சாவு மணி'

## கிளிநொச்சியில் போராட்டம்




(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஸ்ரீலங்கா அரசு முன்வைத்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத் துறைக்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும். ஊடகவியலாளர்கள் தங்களது கடமைகளை சுதந்திரமாக மேற்கொள்வது என்பது கேள்விக்குள்ளாகும். போன்ற விடயங்களை வலியுறுத்தி புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நடை முறைப்படுத்துவதற்கு எதிராக ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தின் சாவுமணி, பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட நாட்டை ஜனநாயக நெருக்கடிக்குள்ளும் தள்ளாதீர், நல்லாட்சிக்கே சட்டத்தை உருவாக்குங்கள் அடக்கி ஒடுக்க உருவாக்காதீர்கள்." போன்ற பதாகைகளை ஏந்தி இருந்தனர். (4-100-316)

# பளையிலிருந்து சாவகச்சேரிக்கு மாடுகள் கடத்திய அறுவர் கைது



(முறிகண்டி)

அனுமதிப்பத்திரமின்றி சாவகச்சேரிக்கு மாடுகள் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பளை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரிக்கு குறித்த மாடுகள் இறைச்சிக்காக ஏற்றி செல்லப்பட்டுள்ளதாக கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ஏ-9 வீதி ஊடாக மாடுகளை ஏற்றி பயணித்த கப் வாகனத்தை பளை பொலிஸார் முகமாலை பகுதியில் இடைமறித்து சோதனை மேற்கொண்டுள்ளனர். இதன்போது குறித்த மாடுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சாரதி மற்றும் உதவியாளர் அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை ஏற்றி சென்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை அதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இதன்போது 7 மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ள பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (4-100)

# ஓ.எம்.பி அலுவலகச் செயற்பாடுகளுக்கு எதிராக முல்லையில் உறவுகள் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் நிறைவடைந்த நாள் முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 2017 மார்ச் எட்டாம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் எமக்கு எந்த நீதியும் கிடைக்காது எனவும் இலங்கை அரசின் காணாமல் போனோர் அலுவலகம் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் எவையும் எமக்கு பலனற்றவைகள் எனவும் சர்வதேச நீதிப்பொறிமுறையோ தமக்கு தேவை என வடக்கு-கிழக்கு எங்கும் ஆறு ஆண்டுகள் கடந்து ஏழாவது ஆண்டாக 150 க்கு மேற்பட்ட உறவுகளையும் இழந்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கமும் காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக இவர்களது சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் முகமாக பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தமது உறவுகளை அச்சுறுத்தி விபரங்களை பதிய முற்படுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் அலுவலக விசாரணைகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் மக்கள் மாபெரும் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட தயாராகினர்.

இந்நிலையில் இன்று விசாரணைகள் இடம்பெறாது என காணாமல் போனோர் அலுவலகம் அறிவித்திருந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக திரண்டு காணாமல் போனோர் அலுவலக செயற்பாடுகள் தமக்கு தேவையில்லை என வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (4)

## சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் – 2023

காலம் :- 14.05.2023

நேரம்:- காலை 9.30 மணி

இடம்: யாழ்.மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாவிடினும் இதனை ஏற்று பொதுக்கூட்டத்திற்கு சமுகம் தரவும்.

குறிப்பு: அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு.ம.மயூரன்,
077 253 4001,
பொதுச்செயலாளர்,
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

(15408)

## புளோரன்ஸ் நைற்றின் கேஸ் தாதியர் பயிற்சிப் பாடசாலை

ஒரு வருட பயிற்சியை நிறைவு செய்த பின் தனியார் வைத்தியசாலையில் வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படும்.

வெளிநாட்டிற்கு செல்பவர்களுக்காக தனிப்பட்ட முறையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அரச வைத்தியசாலையில் பயிற்சிகளும் சான்றிதழ்களும் பெற்றுத் தரப்படும்.

பகுதிநேர கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

புதிய வகுப்புக்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

முகவரி: குஞ்சர்கடையடி. நெல்லியடி.

தொலைபேசி: 077 482 4473, 077 718 6438

## மணமகள் தேவை

1989. இந்து.பூரம். Doctor. யாழ்ப்பாணம். மணமகன் பதிவு #8274.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd.. Colombo 04.
www.EQMarriageService.com
அழையுங்கள்-076 664 9401

## மணமகள் தேவை

1991. இந்து.பரணி. Doctor. மட்டக்களப்பு. பதிவு #8408.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd.. Colombo 04.
www.EQMarriageService.com
அழையுங்கள்-076 664 9401

## மணமகன் தேவை

1995. இந்து.ரேவதி. Doctor. தெல்லிப்பளை.பதிவு #8916.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd.. Colombo 04.
www.EQMarriageService.com
அழையுங்கள்-076 664 9401

## மணமகன் தேவை

1994. இந்து.திருவோணம். Doctor. மானிப்பாய்.பதிவு #9009.No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd.. Colombo 04.
www.EQMarriageService.com
அழையுங்கள்-076 664 9401

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 250 |
| தக்காளி | 180 | 160 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 200 |
| கோவா | 250 | 180 | 180 | 250 |
| கரட் | 140 | 200 | 150 | 300 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 |
| புடோல் | 120 | 140 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 150 | 160 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 180 | 180 | 200 |
| லீக்ஸ் | 260 | 260 | 250 | 320 |
| பீற்றூட் | 240 | 150 | 180 | 250 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 450 | 800 |
| போஞ்சி | 200 | 400 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100-150 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 600 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | -- | -- | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களினூடாக நாட்டின் பொருளாதாரத்தை தலை நிமிரச் செய்யும் டேவிட் பீரிஸ் குழுமம்





போருக்குப் பின்னர் வடக்கு மாகாணம் பொருளாதார ரீதியில் நலிவடைந்து காணப்படுகிறது.

இதன் தாக்கம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களையே அதிகமாக பாதித்திருந்தது.

பெண்கள் தமக்கான சுய தொழிலை மேற்கொள்வதற்கு பொருளாதார ரீதியாக பல சிக்கல்கள் காணப்படுவதுடன் அவர்களுக்கான சுய தொழில் வாய்ப்புக்களும் மிகமிகக் குறைவானதாகவே இருக்கின்றது.

இந் நிலையிலேயே டேவிட் பீரிஸ் குழுமம் பெண்களுக்கான சுய தொழில் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது.

விசேடமாக வடக்கு- கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்கான மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, மோட்டார் கார் என்பவற்றிற்கான பழுது பார்த்தல் இலவச தொழிற் பயிற்சிகளை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இத்திட்டத்தினூடாக வடக்கில் 30 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான தொழில் பயிற்சிகள் நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள டேவிட் பீரிஸ், பஜாஜ் வாகன திருத்தக நிலையத்தில் இதுவரை 20 பெண்கள் திறம்பட தமது பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறி தாம் சொந்தமாக சுயதொழிலை மேற் கொள்ளும் திறமையைப் பெற்று மிளிர்ந்து வருகின்றார்கள்.

இத் திட்டத்தை அறிமுகம் செய்த டேவிட் பீரிஸ் குழுமத்தினரை நிச்சயம் பாராட்டியே ஆக வேண்டும்.

நாட்டில் பெண்களை தொழில் ரீதியாக வலுவூட்டுவதன் மூலம் அவர்களை இந்த நாட்டின் பொருளா தாரத்தை முன்னேற்றுநர்களாக ஏற்றுக் கொள்ளும் செயற்றிட்டத்தை மைய மாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இத் திட்டம் பெண்கள் வாழ்வாதாரத்தை மட்டு மன்றி நாட்டின் பொருளாதாரத்தையும் நிச்சயம் உயர்த்தும் செயற்றிட்டமாகும்.

தொடர்ந்து பெண்களுக்கான பயிற்சிகள் மிகத் துரித கதியில் நடை பெற்று வரும் நிலையில் குறித்த தொழிற் பயிற்சியின் மூலம் பயிற்சி பெறும் பெண்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் தொடர்பில் விளக்கமளித்தனர்.

அவர்களின் சிலரின் கருத்துகளை தொடர்ந்து பார்ப்போம்.

**திருமதி.கோமலேஸ்வரி செல்வகுமார்**

நான் ஒரு முச்சக்கரவண்டி ஓட்டுநராக இருக்கிறேன். அத்துடன் சமூக மட்டங்களிலான பல நிறுவனங்களில் பணியாற்றியிருக்கின்றேன்.

டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் குறித்த திட்டத்தில் நான் இணைந்ததற்கு முக்கிய காரணம் எனது முச்சக்கரவண்டியை நானே பழுது பார்க்கும் நோக்குடனேயே.

பயிற்சிக்கு முன்பு முச்சக்கரவண்டி திருத்தம் தொடர்பில் மிகச் சிரமத்தை எதிர்கொண்டேன். குறித்த பயிற்சி பெற்ற பின் அது இலகுவாக்கப்பட்டுள்ளது. தற்போது நான் எனது முச்சக்கர வண்டியை பழுது பார்க்க கூடிய நிலையில் இருக்கின்றேன். அதற்காக டேவிட் பீரிஸ் நிறுவனத்துக்கு மிக்க நன்றிகள்.

குறித்த வாகனத் திருத்த பயிற்சியினைப் பெற வடமாகாண பெண்கள் பின்நிற்கக் கூடாது. தாமாக முன்வந்து குறித்த பயிற்சியைப் பெற்று மற்றவர்களில் தங்கி வாழும் நிலையில் இருந்து தமது சொந்தக்காலில் நிற்கும் மங்கையராய் மிளிர வேண்டும்.

**திருமதி. தியாகேஸ்வரி சக்திவேல்**

டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் குறித்த இலவச வாகனத் திருத்தப் பயிற்சியின் மூலம் நான் எனது பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

அத்துடன் நான் பல பொது அமைப்புக்களில் வேலை செய்கின்றேன். அதனால் அனைத்துப் பெண்களுக்கும் ஒரு தகவலைக் கூறலாம் என நினைக்கிறேன்.

எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எமக்கு ஒரு தொழில் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் எமது பொருளாதாரத்தை நாம் மேம்படுத்த முடியும்.

எனவே அனைத்துப் பெண்களும் பின்நிற்காது குறித்த பயிற்சி நெறியில் இணைந்து பயன்பெற வேண்டும்.

**திருமதி.சி.தவமலர்**

நான் கொடிகாமம் பகுதியில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக கடமை ஆற்றிக்கொண்டிருக்கிறேன். டேவிட் பீரிஸ் பெண்களுக்கான இலவச வாகனத் திருத்த பயிற்சி நெறியைப் பற்றி அறிந்து மிகவும் மகிழ்வுடன் குறித்த திட்டத்தில் இணைந்து கொண்டேன்.

எனக்கு முச்சக்கரவண்டி ஒன்றை கொள்வனவு செய்ய வேண்டும் எனும் விருப்பம் உண்டு. அதற்கு அதைப் பழுதுபார்க்கும் திறனைப் பெற்றுக் கொண்டால் சிறந்தது எனக் கருதி பயிற்சி பெற்றேன். தற்போது NVQ-4 பயிற்சியை மேற்கொண்டிருக் கிறேன்.

எமக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மிக நல்ல முறையில் நடைபெறுகின்றன. அத்துடன் நாம் மிகக் கௌரவத்துடன் நடத்தப்படுகின்றோம். இதையிட்டு நான் டேவிட் பீரிஸ் நிறுவனத்திற்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் குறித்த திட்டத்தில் பெண்களுள் பலர் இணைவதனூடாக பல புதுமைகளைப் படைக்கலாம் என கருதுகிறேன்.

**திருமதி.தர்சினி ராஜ்குமார்**

எனக்கு திருமணமாகி இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நான் வீட்டில் வைத்து மிக்சர், பருத்தித்துறை வடை, பயிற்ஸ் போன்றவற்றை தயாரித்து கடைகளுக்கு விநியோகித்து வருகிறேன்.

ஆரம்பத்தில் சைக்கிளிலும் பின்னர் மோட்டார் சைக்கிளிலும் வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நான் தற்போது முச்சக்கர வண்டி ஒன்றை கொள்வனவு செய்து அதனூடாகவே விநியோக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். நான் முச்சக்கர வண்டி ஓட்டுவதைப் பார்த்து பலர் பலவிதமாக பேசினார்கள். ஆனால் நான் அது தொடர்பில் கவனிக்காது எனது தொழிலில் கவனம் செலுத்தினேன்.

டேவிட் பீரிஸ் நிறவனத்தின் இலவச வாகனத் திருத்த பயிற்சியை கேள்விப்பட்டு நான் தேடி வந்து இத்திட்டத்தில் இணைந்து கொண்டேன்.

ஏனென்றால் எனது முச்சக்கர வண்டி பழுதடைந்தால் நானே பழுது பார்க்க முடியும் என்ற நோக்கத்தினாலேயே.

நான் வீதியில் செல்லும் போது பலர் வாகனம் பழுதுபட்டு வீதியிலே நிற்பார்கள். அவர்களுக்கு வாகனத்தைப் பழுது பார்த்துக் கொடுத்திருக்கிறேன்.

அப்போது அவர்கள் என்னைப் பாராட்டி புகழ்ந்துபோது அந்தப் புகழ் டேவிட் பீரிஸ் நிறவனத்துக்கே உரித்தானது என எண்ணி மகிழ்வேன்.

**டேவிட் பீரிஸ் நிறுவன யாழ்ப்பாண வாகன வேலைத்தள முகாமையாளர் வி.ஜெகநேசன்** கருத்து தெரிவிக்கும் போது,

வடக்குக்கு கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாதமான இத்திட்டத்தை வெற்றிகரமாக கொண்டு செல்ல டேவிட் பீரிஸ் நிறுவன குழுமத் தலைவர் ஆர்வத்துடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

இத்திட்டத்தில் வடக்கின் பெண்கள் இணைந்தால் அது நிச்சயம் நலிவுற்ற எமது பொருளாதாரத்தை முன்னேற்ற உதவியாக அமையும் என நம்பிக்கையுடன் தெரிவித்தார்.





நாகலிங்கம் நூலாலயம் ஆதரவில் வீணை மைந்தன் கே.ரி.சண்முகராஜா (கனடா) நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மண்ணும் மனசும், மறக்கத் தெரியாத மனசு, தமிழ் சினிமாவில் மகாகவி பாரதியின் பாடல்கள் ஆகிய நூல்கள் இவ்வாறு வெளியிடப்பட்டன. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர், கலாநிதி. நாகலிங்கம், சண்முகலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் சமத்துவக் கட்சியின் மே தினம்

(கிளிநொச்சி)

அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் எனும் தொனிப் பொருளில் சமத்துவக் கட்சியின் மே தினம் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் வரும்நாளை பிற்பகல் 2மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக் கட்சியின் மே தின செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ் மக்கள் ஏற்கனவே போரின் நெருக்கடியையும் போர்க்காலப் பொருளாதார நெருக்கடியையும் மிக நீண்ட காலமாகச் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்.

அந்த நெருக்கடிகளிலிருந்து மீளமுதல் இப்பொழுது ஏற்பட்டிருக்கும்பொருளாதார நெருக்கடியும் தொடரும் இன ஒடுக்குமுறையின் நெருக்கடியும் இணைந்து மேலும் பெரிய நெருக்கடிச் சுமையை உருவாக்கியுள்ளது. இதற்குள் புதிய பயங்கரவாதச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

நாட்டில் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடத்தப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீள வேண்டும். இனியும் சம்பிரதாயமான அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது. சம்பிரதாயமான மேதின நிகழ்வை நடத்துவதில் அர்த்தமில்லை.

இன்று பிற நாடுகளிலும் சர்வதேச வங்கிகளிடத்திலும் அடமானமாகியுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்க முடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# முச்சக்கரவண்டி, மோ.சைக்கிளை மோதித்தள்ளிய கப்ரக வாகனம்
## ஒருவர் படுகாயம்



(முறிகண்டி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் நேற்று பகல் இடம்பெற்ற விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப் வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியில் தரித்திருந்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த வாகனம் முச்சக்கர வண்டியுடன் மோதி பின்னர் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மோதித்தள்ளியதுடன், வீதி அருகில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கற்களுடனும் மோதியுள்ளது. அப்பகுதியில் உள்ள மரத்துடன் மோதி குறித்த வாகனம் நின்றுள்ளது.

இந்த நிலையில், முச்சக்கர வண்டியில் இருந்த சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய கப் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, விபத்து இடம்பெற்ற பகுதியில் 15க்கு மேற்பட்டவர்கள்பேருந்து சேவையை பெற்றுக்கொள்வதற்காக கூடுவர். குறித்த விபத்து இடம்பெறுவதற்கு சற்று முன்னர் பேருந்தில் பயணிகள் ஏறிச் சென்றமையால் விபத்தினால் ஏற்படக் கூடிய பாரிய இழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமும் விதி முறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை. மாறாக சட்டத்திற்காகவும் விதி முறைகளுக்காகவும் மக்கள் இல்லை
– காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களின் துன்பத்துக்கு இந்தியாவின் அசமந்தமும் காரணம்

ஒருமுறை இராமபிரான் நீராடுவதற்காக ஆற்றங்கரைக்குச் செல்கிறார்.

ஆற்றங்கரை மண்ணில் தனது வில்லை ஊன்றிவிட்டு ஆற்றில் இறங்கி நீராடுகிறார்.

மீண்டும் கரைக்கு வந்து, நிலத்தில் ஊன்றி வைத்த வில்லை இழுத்து எடுக்கின்றார்.

என்னே! துன்பம். வில் குத்தியபடி ஒரு தேரை துடித்துக் கொண்டிருக்கிறது.

இதைக் கண்ட இராமபிரான் அதிர்ந்து போனார்.

தேரையே! எனது வில் உன்னைக் குத்தும்போது நீ என்னிடம் முறையிட்டிருக்கலாமல்லவா என்றார் இராமர்.

அதற்கு தேரை; சுவாமி! எனக்கு யாரெல்லாம் துன்பம் செய்கிறார்களோ அப்போதெல்லாம் நான் இராமா... இராமா... என்று தங்களிடம்தான் முறையிடுவேன்.

ஆனால் அந்த இராமரே என்னைக் குத்தும்போது நான் யாரிடம் முறையிட முடியும்.

இவ்வாறு கூறிய தேரை சிறிது நேரத்தில் இறந்து போனது.

இந்தக் கதையின் தேவை என்ன? என்பதை யாம் அறியோம். ஆனால் தேரையின் அவலம் ஈழத் தமிழர்களாகிய நமக்கு மிகவும் பொருந்தும்.

உண்மை. இந்த நாட்டின் பேரினவாதிகள் எங்களைத் தாக்கும் போதெல்லாம் இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்று நம்பினோம்.

அவ்வாறு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் நடந்து கொண்டார்.

அதன் காரணமாக இன்னமும் அந்த நம்பிக்கை நீண்டு செல்கிறது.

இதில் கொடுமை யாதெனில், 2009ஆம் ஆண்டு வன்னி யுத்தத்தின்போது போருக்குள் அகப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள், இந்தியா எங்களைக் காப்பாற்றும் என நம்பினர்.

ஆனால் அந்தக் கொடும் போரில் இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கரங்களும் இருந்தன.

அந்தக் கரங்களும் சேர்ந்தே தமிழ் மக்களின் கழுத்தை நெரித்தன என்பதுதான் உண்மை.

சரி, பழி தீர்த்துவிட்டார்கள் என்றால் இப்போதும் 13ஐ முழுமையாக அமுல்படுத்த இந்தியா இலங்கையை வலியுறுத்தும் என்பதையே இந்திய ஆட்சித் தரப்பு சொல்லிக் கொள்கிறது.

கடவுளே! இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி 36 வருடங்கள் ஆகிவிட்டன.

ஆனால் இன்றுவரை 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவோம் என்பதையே இந்தியா கூறுகிறதெனில், எங்களின் துன்பத்துக்கு இந்தியாவும் காரணம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

## அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பயன்படுத்தப்படும் அனைத்து முகப்பூச்சுக் கிறீம்கள் மற்றும் பொடிலோஷன்களில் அனுமதிக்கப்பட்ட அளவை தாண்டிய கன உலோகங்கள் இருப்பதாகவும் அவை உடலுக்குத் தீங்கு விளைவிப்பதாகவும் சோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொறுப்பான தகவல்கள் மற்றும் தேவையான சட்டப் பணிகள் குறிப்பிடப்படாமல், பொடிலோஷன் பொதிகளில் முறைகேடு இருப்பது கொழும்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்ட விரோத முகப்பூச்சுக் கிறீம்கள் மற்றும் பொடிலோஷன்களை விற்பனை செய்த பல கடைகளுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

சோதனைகள் மற்றும் விசாரணைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டாலும், வெள்ளையாக்கும் முகப்பூச்சுக் கிறீம்கள் மற்றும் திரவங்களுக்கு அதிகமான தேவை உள்ளதால் குறித்த தயாரிப்புகளை விற்பனை செய்வதை கட்டுப்படுத்துவதில் தடைகள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, முகப்பூச்சுக் கிறீம்கள், திரவங்கள் மற்றும் பொடிலோஷன்களை கொள்வனவு செய்யும்பொழுது உரிய பொறுப்பான நிறுவனமொன்றின் தகவல்கள் ஏனைய தகவல்கள் உள்ளிட்டவை குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சரி பார்க்குமாறு கொழும்பு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7,9)

## தந்தையின் பணத்தை திருடி அயல் வீட்டு குடும்ப பெண்ணுக்கு நகை பரிசளித்த மாணவன்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் மகன் தந்தையின் 3 இலட்சம் ரூபா பணத்தை ஏரிஎம் இயந்திரம் மூலம் எடுத்து சங்கிலி வாங்கி அயல் வீட்டு இளம் குடும்பப் பெண்ணிற்கு பரிசளித்த சம்பவம் பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளது.

தனது வங்கி அட்டையிலிருந்து தனக்கு தெரியாது 3 லட்சம் ரூபா பணம் எடுக்கப்பட்டுள்ளதை அவரது போனில் வந்த குறுந்தகவல்களை பார்த்த வர்த்தகர் அதிர்ந்துள்ளார்.

வங்கி அட்டை மனைவியிடமே வர்த்தகர் கொடுத்து வைத்திருந்தார். இந்நிலையில் மனைவியிடம் கொடுக்கப்பட்ட அட்டையை எடுத்து மகன் பணத்தை எடுத்துள்ளான்.

இதனையடுத்து வர்த்தகர் மனைவியிடம் விசாரணை நடத்தி அவருக்கு எதுவும் தெரியாது என சொல்ல பொலிஸாரிடம் பணம் களவாடப்பட்டமை தொடர்பில் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து வங்கி சிசிரிவி கமராவைப் பரிசோதனை செய்த போது மகனே குறித்த பணத்தை எடுத்துள்ளதை பொலிஸார் அறிந்துள்ளனர். மகன் பணம் எடுத்ததை பொலிஸார் மூலம் அறிந்த வர்த்தகர் உடனடியாக தனது முறைப்பாட்டை ரத்து செய்ய முயன்றார்.

ஆனாலும் பொலிஸார் சம்மதிக்காது குறித்த பணத்தை மகன் எடுத்து போதைப் பொருள் போன்ற நடவடிக்கைக்கு பயன்படுத்தியிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன் பின்னர் மகனிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த பணத்தை அட்சயதிருதியை அன்று எடுத்து யாழில் நகைக்கடை ஒன்றில் தங்கச் சங்கிலி வாங்கியதாக கூறியுள்ளார்.

சங்கிலி எங்கே? என பொலிஸார் விசாரணை செய்த போது அந்தச் சங்கிலியை அயல் வீட்டுப் பெண்ணிடம் இரவலாக கொடுத்தது தெரிய வந்துள்ளது. (ம-7,9)

## பாவனைக்கு உதவாத சுமார் பத்து இலட்சம் கிலோ அரிசி கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

கொத்தட்டுவையில் களஞ்சிய சாலையொன்றில் இருந்து பாவனைக்கு உதவாத அரிசித் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10,08,000 கிலோ கிராம் அரிசி கைப்பற்றப்பட்டுள்ளதாக கொத்தட்டுவைக்கான பொது சுகாதார பரிசோதகர் அஜித் விதானகே தெரிவித்துள்ளார்.

குறித்த அரிசி தொகையினை விற்பனை செய்ய தயாராக வைத்திருந்த நிலையில், பொது சுகாதார பரிசோதகர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவிற்கமைய களஞ்சிய சாலையொன்றில் இருந்து குறித்த அரிசி தொகையின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் குறித்த களஞ்சியசாலைக்கு பொறுப்பாக செயற்பட்ட நபரும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## வெளிவிவகார அமைச்சர் தென்கொரியா விஜயம்

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மே மாதம் 2 முதல் 5 வரை நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, தென்கொரியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

மே 4ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆளுநர்களுக்கான வர்த்தக அமர்வில் இலங்கையின் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான தற்போதைய ஈடுபாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக, இந்த நிகழ்வின் பக்க அம்சமாக பல நாடுகளின் பிரதிநிதிகளுடன் இருதரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7,9)

## கட்டுநாயக்க வந்த விமானம் மத்தளக்கு திருப்பப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சூழ நிலவிய மோசமான வானிலை காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை தரையிறங்க வந்த விமானத்தை மத்தள விமான நிலையத்துக்கு திருப்பிவிடப்பட்டது.

இந்தியாவின் சென்னையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்த விமானமே மத்தள விமான நிலையத்துக்கு திருப்பிவிடப்பட்டுள்ளது. (ம-7,9)

## நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்களில் சோதனை நடடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்திலும்அதன் பின்னரும் நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்களில் சுமார் 2500 இற்கும் அதிகமான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக நுகர் வோர்விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

கடந்தமாதம் 25 ஆம் திகதிமுதல் இந்தமாதம் [illegible] ஆம் திகதி வரை [illegible] காலப் பகுதியில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை தெரிய வந்துள்ளது.

மேலும் அதிகவிலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## வடமராட்சி கிழக்கில் இளைஞன் மீது தாக்குதல்

யாழ். வடமராட்சி கிழக்கு - வத்திராயன் பகுதியில் இளைஞன் ஒருவர் மீது வீடு புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞன், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

தாய், தந்தையை இழந்த குறித்த இளைஞன் தனது சகோதரனுடன் வசித்து வருவதாகவும் சகோதரன் தென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்றுவருவதாகவும் தாக்குதல் நடத்தப் பட்டவேளை இளைஞன் வீட்டில் தனித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**பதவியில் கவனம் இனித் தேவை. திட்டம் போட்டுச் செய லாற்றுவதில் வல்லவர்களான கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.04.2023 அன்று உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கு சுமார் ஒன்றரை ஆண்டு காலம் வீற்றிருந்து தன் பார வையால் பல நன்மைகளை வழங்கு வார். "பத்தில் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும்"என்பார்கள். வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமைய உங்கள் சுய ஜாதகத்தில் குருவின் பாதசார பலமறிந்து சிற ப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங் கள்.

**குரு இருக்குமிடத்தின் பலன்.**

குரு பகவான் உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர். அவர் இப்பொழுது 10 ஆம் இடத்திற்கு வருகின்றார். எனவே பணிபுரியும் இடத்தில் பதற்றங்கள் கூடாது. எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். பத் திலே குருவும் வந்தால் பதவியில் மாற்றம் சேரும். முத்தான வாழ்வில் வந்த முட்டுக் கட்டைகள் அகலும். கொத்தோடு விலகும் துன்பம் கூடுதல் கவனம் வைத்தால் தத்தளிக்கின்ற வாழ்வில் தனத்தோடு புகழும் கூடும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின் றது. இது பொது நியதி தான் என்றா லும் பத்தில் குரு வரும் பொழுது மிக வும் கவனத்துடன்தான்செயற்பட வேண் டும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளில் திடீர் திடீரென மாற்றம் வரலாம். ஆடம்பரச் செலவுகளால் கையிருப்புக் கரையும். அதிகார வர்க்க த்தினரின் பகையால் மனக்கிலேச ங்கள் அதிகரிக்கும். தொழில் புரிபவர் களுக்கு பணியாளர்களால் தொல்லை உண்டு.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குரு பகவான். அவர் உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின் றார். குறிப்பாக உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான வர் குருபகவான். 2 ஆம் இடத்தில் குரு வின் பார்வை பதிவதால் குடும்ப ஸ்தா னம் பலப்படுகின்றது. எனவே குடும்பத் தில் இதுவரை கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் இனி படிப்படியாக மாறும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பணப்புழக்கம் நன்றாக இருக் கும். குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் வாகனம், சுகம், கல்வி, தாய் போன்றவற்றைக் குறிக்குமிடம் பலப்படு கின்றது. எனவே சந்தோஷங்களைச் சந்திக்கும் சூழ்நிலை அதிகரிக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். தாய் வழியில் நன்மை கிடைக் கும். பயணங்கள் பலன் தரும். பிள்ளை களின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் இதுவரை இருந்த எதிர்ப்புகள் படிப்படியாகக் குறையும். இல்லத்தில் அமைதி நிலவ வழி பிறக்கும். பஞ்சாயத்துக்கள் சாதக மாகும். பணிபுரியும் இடத்தில் செல் வாக்கு உயரும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும். தொழிலை மேம்படுத்த முதலீடு கிடைக்கும். இதுவரை ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்ன மருத்துவர்கள், இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே குண மாக்கி விடுவர்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக் காலில் குரு பக வான் சஞ்சரிக்கும் பொழுது குரு பக வான் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது தேவையற்ற அலைச்சல்களும் இடை யூறுகளும் வந்து சேரலாம். அதே நேரத்தில் அஷ்டமத்தில் சனி சஞ்ச ரிப்பதால் பொறுப்புகள் சொல்வதன் மூலம் புதிய பிரச்சினைகள் தலை தூக்கும். பணநெருக்கடியும் அதிகரிக் கும். பணியாளர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் தொல்லை ஏற்படும். ஆற்றல் மிக்கவர்கள் அருகில் இருந் தாலும் அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. பரணி நட்சத்திரக் காலில் குருபகவான்சஞ்சரிக்கும்பொழுது குரு பகவான் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் பரணி நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். நிதானமாக எதையும் யோசித்துச் செய்வது நல்லது. இல்லத்தில் மனம் வருத்தப்படும் படியான செயற்பாடுகள் நடைபெறும். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவரது சாரத்தில் பகை கிரக மான குரு பகவான் வரும் பொழுது நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்று மாக இருக்கலாம். பிறருக்கு வாக்குறுதி கொடுத்தால் யோசித்துக் கொடுக்க வேண்டும். உங்களிடம் ஒப்படைக் கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் எதிர்பாராத பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக் கும். கல்யாண முயற்சிகள் கைகூடும். எதிர்பாராத மாற்றங்கள் இல்லம் தேடி வரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். படித்து முடித்து வேலை இல்லாமல் இருந்த வாழ்க்கைத் துணைக்கு இப் பொழுது வேலை கிடைக்கும். வெளி நாட்டில் இருந்து ஆதரவுக் கரம் நீட்டு வர். வெளி மாநிலங்களுக்குச் சென்று பணிபுரியும் வாய்ப்பு உண்டு. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்ப வர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க பல ன்கள் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ள வர்களின் ஆதரவும் புதிய பதவி களும் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர் கள்.

**ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் கால த்தில் 8.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றனர். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பூர்வீக சொத்துப் பிரச்சினை அகலும். புதிய பாதை புலப்படும். பெற்றோர் வழியில் தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு கிடைக் கும். கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். இது வரை குருவுடன் ராகு சேர்ந்திருந்தது. இப்பொழுது ராகு விலகுவதால் குரு கூடுதல் பலம் பெறுகின்றார். எனவே அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். கேது சகோதர ஸ்தா னத்தில் சஞ்சரிப்பதால் உடன் பிறப்புகளின் ஒற்றுமை கொஞ்சம் குறையலாம். செய்த உதவிக்கு உறவி னர்கள் நன்றி காட்டவில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். இதன் விளைவாக குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமா ற்றங்களைச் சந்திக்க நேரிடும். திட்ட மிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லும். மறை முகப் பகை ஏற்படும். எனவே தொழில் முன்னேற்றத் தையோ, உத்தியோகம் சம்பந்தமான வற்றையோ யாரிடமும் முன்கூட்டியே சொல்ல வேண்டாம். அரசியல் மற் றும் பொதுநலத்தில் இருப்பவர்கள் பொறுப்புகளில் இருந்து விடுபடும் சூழ்நிலை உண்டு. எதிர்பாராத விரய ங்களால் மகிழ்ச்சி குறையும். உடல் நலத்தில் எவ்வளவு கவனமாக இருந் தாலும் நோய் வந்து மருத்துவச் செலவை உண்டாக்கும்.




## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!



### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

கடக இராசியில்பிறந்த பெண்களுக்கு பணப் பற்றாக்குறை அதிகரிக்கும். பாசம் மிக்க உறவினர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள் ளுங்கள். இடமாற்றங்கள் இனிமை தருவதாக அமையும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் இருக்க ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல் லது. உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவ தைத் தவிர்க்கவும். தாய்-தந்தை உடல்நலத்தில் கவனம் தேவை. உடன்பிறப்புகளின் வழியே சுப காரி யம் முடிவாகும். பிள்ளைகளை உங் கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்க ளுக்கு உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உயர்மட்ட அதிகாரிகள் கூடுதல் பொறுப்புகளை வழங்குவர்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழியாடு!**

இல்லத்து பூஜை அறையில் அபி ராமி அம்மன் படம் வைத்து வழிப டுவது நல்லது. திங்கட்கிழமை தோறும் விரதமிருந்து அபிராமி அம்மன் பதிகம் பாடி வழிபட்டால் அனைத்து யோக ங்களும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

இளைஞரொருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் நா.கபிலன் (வயது-29) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்

குறித்த ஆலயத்தில் இரவு இடம்பெற்ற உற்சவ பூஜையின்போது ஆலயத்தின் கதவினுள் இருந்த மின்சார வயரினை குறித்த இளைஞன் எடுத்துள்ளார்.

இதன்போது வயரில் மின்சார ஒழுக்கு காணப்பட்ட இடத்தில் இளைஞரின் கை பட்டமையினையடுத்து மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலிலேயே இளைஞர் மரணமடைந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## கிளிநொச்சியில்...

என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குறித்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வான் ஒன்றும் உந்துருளி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,9,60)

## ஊரெழுவில்...

முன்தினம் வெள்ளிக்கிழமை ஊரெழு அம்மன் கோவிலுக்கு சென்று விட்டு துவிச்சக்கரவண்டியில் பலாலி வீதி ஊடாக யாழ். நோக்கி சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த வான் மோதியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயம் அடைந்த குறித்த வயோதிபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,9,60)

## கிறீஸ் கத்தியை...

ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸார், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர்.

அதன்போது பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியைக் காண்பித்த அவர்கள் மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிப் பதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர். (ம-7,9,33)

## கடன் எடுக்க...

னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் உண்மை நிலை தெரிந்தவர்கள் அறிவார்கள் நாடு மேலும் பின்னோக்கிச் செல்லப்போகின்றது என்று. இருப்பதைவிட பெரிய பிரச்சினைகள் வரப்போகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவொரு இடைவேளை. கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்குதல், அரச நிறுவனங்களை விற்றுக் கடனை அடைத்தல்போன்றவைநாட்டை முன்னேற்றுவதற்கு உதவாது.

இருக்கின்ற கடைசி சொத்தையும் விற்று கடன் வாங்கும் இடம்தான் ஐ.எம்.எப். இப்போது இந்த ஆட்சியாளர்கள் அங்கும் கடன் வாங்கிவிட்டார்கள்.

அதற்கு அப்பால் என்ன செய்வது? ஒரு டொலரையாவது மேலதிகமாகச் சம்பாதிப்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இல்லை என்றார். (ம-7,9)

## நாட்டை...

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், "கடந்தாண்டு எமது அரசாங்கம் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. எமது நாட்டு மக்களும் இதனை மறந்திருக்க மாட்டார்கள்.

இந்த பிரச்சினையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினார்கள். சர்வதேச நாணய நிதியத்தை இதற்காக நாடுமாறு பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் கோரினார்கள்.

இதன் பலன் இன்று எமக்கு கிடைத்துள்ளது. 2.9 பில்லியன் டொலர் நிதியுதவி எமக்கு கிடைக்கவுள்ளது. ஐ.எம்.எப். இடம் செல்வது இது ஒன்றும் புதிதல்ல. நாம் 16 தடவைகள் ஐ.எம்.எப். இன் உதவியை நாடியுள்ளோம். இதனை இங்குள்ள பலர் மறந்துவிட்டார்கள்.

எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, விவசாயிகளுக்கு மீண்டும் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது என்றார். (ம-7,9)

# ஹைதராபாத் வெற்றி

டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் ஹைதராபாத் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டாஸ் வென்ற ஹைதராபாத் முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த ஹைதராபாத் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 197 ரன்களை குவித்தது.

தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா 67 ரன்களை குவித்தார். ஹென்ரிச் கிளாசன் 27 பந்துகளில் 53 ரன்களை குவித்து அசத்தினார்.

அப்துல் சமத் 21 பந்தில் 28 ரன்களை சேர்த்தார். டெல்லி கேப்பிட்டல்ஸ் சார்பில் மிட்செல் மார்ஷ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

198 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணிக்கு, கேப்டன் டேவிட் வோர்னர் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அடுத்து இறங்கிய மிட்செல் மார்ஷ், பிலிப் சால்ட்டுடன் ஜோடி சேர்ந்து அதிரடியாக ஆடினார்.

2வது விக்கெட்டுக்கு 112 ரன்கள் சேர்த்த நிலையில் சால்ட் 59 ரன்னில் அவுட்டானார். மனீஷ் பாண்டே ஒரு ரன்னில் ஆட்டமிழந்தார்.

மிட்செல் மார்ஷ் 63 ரன்னிலும், பிரியம் கார்க் 12 ரன்னிலும், சர்ப்ராஸ் கான் 9 ரன்னிலும் அவுட்டாகினர். இறுதியில், டெல்லி அணி 188 ரன்கள் மட்டுமே எடுத்து தோற்றது.

இதன்மூலம் ஹைதராபாத் அணி 9 ரன்கள் வித்தியாசத்தில் வென்று 3வது வெற்றியைப் பதிவு செய்தது. (ம-7,9)

## மூளாய்...

டுள்ளதால் அங்கு பதற்றமான நிலைமை காணப்பட்டது.

தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,33,104)

## பண...

சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதற்கு உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களின் விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிக உயர்வான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமையே பிரதான காரணமாக அமைந்திருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த மார்ச்சில் 47.6 சதவீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஏப்ரலில் 30.6 சதவீதமாகவும், மார்ச் மாதம் 51.7 சதவீதமாகப் பதிவான உணவல்லாப் பணவீக்கம் ஏப்ரல் மாதம் 37.6 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1556
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 7 5 0 9 5 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1131
R 01 38 53 72
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 3343
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
R 16 20 73 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1449
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம்
வெற்றி இலக்கங்கள்
W 12 12 13 40 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 410
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 22 28 40 54 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/29
சீட்டிழுப்பு இலக்கம் 5101
ஆங்கில எழுத்து
வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 0 6 3 1 6 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2075
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.04.29
தினம் சனிக்கிழமை
P 14 33 56 73
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை
ரூ. 4,346,720/-
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.29
சீட்டிழுப்பு இல : 4236
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 3,724,880/-
வெற்றி இலக்கங்கள்
18 23 65 66
ஆங்கில எழுத்து
P
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,412,217.40
திகதி 2023-04-29
வெற்றி வாரம் 3787
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்
08 24 45 54
சிம்மம்
DLB
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 10,007,940/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 31 22 25 43 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1251
வர்ணம் சிவப்பு
திகதி 2023.04.29 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 326,461,503.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சம்பத வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 590
திகதி 2023-04-29
வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 32 40 65
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,388,536/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1901
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 5,230,500/-
வெற்றி இலக்கங்கள்
04 48 72 73
ஆங்கில எழுத்து
O
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒரு பரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக்காணிகள் விற்பனைக்குண்டு**

- தங்குவிடுதி மற்றும் வீடமைப்பதற்கு உகந்தது.
- மொத்தமாக ஆறு பரப்பு உண்டு

(15396)

**077 735 4470**

## சடலம் மீட்பு

நுவரெலியா பொகவந்தலாவ பொகவானை பெருந்தோட்ட தேயிலை மலையிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வயோதிபர் வீட்டிலிருந்து காலை தேயிலை மலைக்கு தொழிலுக்கு சென்றுள்ளதாகவும் அவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா - பொகவந்தலாவை பகுதியைசேர்ந்த 78 வயதுடைய செல்லன் ராமசாமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(ம-7.9)

## விற்பனைக்கு

இருபாலை அரசடி வீதி இராசன் கடை அருகில் 4 பரப்பில் 3 அறை தண்ணீர் , மின் வசதியுடன் வீடும் பற்றியில் இயங்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விற்பனைக்கு (15306)

**077 882 3330**

## வேலை வாய்ப்பு

சில நிறுவனங்களின் சந்தைப்படுத்தல் தேவைகளுக்கு Promation girls/boys உடன்தேவை.நாளாந்தம் சம்பளம் மற்றும் உணவு வழங்கப்படும் (15413)

Rathee Event Management

**077 473 7737**

**076 944 7737**

## இராஜ மருத்துவம்

கரப்பன்,கிரந்தி,சோரியாசிஸ்,மதுமேகம், வெள்ளைபடுதல் ,கெர்ப்பவாயு , தீட்டு ஒழுங்கீனம் , உடல்மெலிவு , பருமன்,செங்கமாரி , பக்கவாதம் , ஆண்மைக் குறைவு ,சிறியமார்பகம் ,மனஅழுத்தம் , சிகிச்சை பெறுவதற்கு . (C-6450)

**076 274 4488**

பேரறிஞர் DR.K பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர்
வல்லை வீதி , சங்கானை

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி போன்ற பிரதான வீதிகளை அல்லது நகர்ப்புற பகுதிகளை அண்மித்த இடங்களில் நல்ல சுற்றுப்புற சூழலில் மூன்று(03) அல்லது நான்கு (04)அறைகள் மற்றும் இரண்டு(02) குளியல் அறைகள் கொண்ட நன்கு பராமரிக்கப்பட்ட வீடொன்று வாடகைக்குத் தேவை.குறைந்த பட்சம் இரண்டு வருட வாடகைக் காலம் மற்றும் நியாயமான வாடகை எதிர்பார்க்கப்படுகிறது. (15398)

**077 890 3904/077 485 7552**

## PickMe Taxi

உங்கள் வாகனத்தை Pickme சேவையில் இணைந்து மேலும் அதிக வருமானம் பெறலாம் இணைப்பு கட்டணம் முற்றிலும் இலவசம் (15413)

**077 473 7737**

**077 874 6463**

## கடன் வசதி

நீங்கள் வியாபாரம் ஒன்று நடத்துபவரா ? அப்படியான்னால் உங்களுக்கு தேவையான உடன் கடன் வசதி எம்மால் செய்து தர முடியும் வட்டி 5% மட்டும் இது நடைமுறை கணக்கு (current Account) வைத்திருப்பவர்கள் மட்டும் (15413)

Sj Finance

**077 473 7737**

## காணி விற்பனைக்கு

**A9 வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள பளிக்கர் நீராவியடி புளியங்குளத்தில்இரண்டு ஏக்கர் கொண்ட உறுதிக்காணி விற்பனைக்குண்டு.**

- எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சிய சாலைஅமைப்பதற்கு உகந்தது.
- மொத்தமாக எட்டு ஏக்கர் உண்டு
- மாங்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளது.

(15396)

**077 735 4470**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்.நாவற்குளி A9 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு உள்ள சூழல்
- நன்னீருற்று
- 1 பரப்பின் விலை 650,000/- மட்டும்

(15404)

**076 436 5814/077 065 4525**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் ஆண் 33 வயது 4 செவ்வாய் 17 ½ பாவம் .பூராடம்.தனியார் கம்பனியில் வேலை செய்கிறார் . சொந்த வீடு உண்டு . ஆட்டோ உண்டு (15395)

**074 018 2267**

**077 172 5450**

## தென் இந்திய யாத்திரை

**தென் இந்திய யாத்திரை-20நாட்கள்**
**காசி யாத்திரை-25 நாட்கள்**
**சீரடி யாத்திரை-10 நாட்கள்**
**ஆரம்பம் -24.05.2023**

பல வருட அனுபவம் வாய்ந்த ஆன்மீகப்பேரொளி ஒருவரின் நேரடி வழிகாட்டலில் குறைந்தது 70 கோவில்களை தரிசனம் செய்ய முடியும்.
காசி யாத்திரையில் மதுரா, பிருந்தாவன், ஹரித்துவார், ரிஷிகேஷ், அயோத்தி, கயா செல்லும் வாய்ப்புகள்.
சீரடி யாத்திரையில் இரண்டு ஜோதிலிங்கன்,எல்லோரா குகை, அருணா வருணா, கோதாவாரி நதிகளில் நீராடவும் முடியும்.
பிராமணர்களுக்கு தனியாக அழைத்து செல்ல வாய்ப்பும் உண்டு. (15382)

**077 083 3339/074 249 3339**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (15247)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## V VISION SECURITY SOLUTION

CCTV கமராக்கள் , பொருத்துதல் பழுதுபார்த்தல் ,பராமரிப்பு வேலைகள் உத்தரவாதத்துடன் செய்துதரப்படும் (15411)

**0779986772**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீருற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்


**பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை** (15389)

**076 755 8606 ,077 638 5683**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீருற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை



**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

**076 911 9371, 076 165 2129**

## G.C.E O/L 2022

www.edus.lk
EDUS Learning made lovable
தமிழ் | සිංහල | English

மாணவர்களுக்கான மாபெரும் இறுதி கருத்தரங்கு

ஆங்கிலம் | வரலாறு | விஞ்ஞானம் | கணிதம் | தமிழ்



- முன்னோடி ஆசிரியர்களின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் & Recordings.
- முக்கிய குறிப்புகளுடன் கூடிய தெளிவான விளக்கங்கள்.
- மாணவர்களின் வெற்றிக்கு பரீட்சை எழுத முன்னரான ஆயத்தங்கள் தொடர்பான முழு அறிவுறுத்தல்களும் ஊந்துதலும் கருத்தரங்கின் இறுதிநாள் இலங்கையின் சிறந்த வளவாளரால் நடைபெறும்.
- கீழ்க்காணும் வங்கிக்கணக்கிற்கு பணம் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை மாணவர் பெயர்,பாடசாலை மற்றும் WhatsApp இலக்கம் போன்றவற்றுடன் 0777 123 330 க்கு May 1 ம் திகதிக்கு முன்னராக அனுப்பி இணைந்துகொள்ளவும்.

(15414)

ரூ . 2,000 — 5 பாடங்களுக்குமான மொத்த கட்டணம்

May 1 - 12 தினமும் மாலை 7 மணி

Bank of Ceylon — EDUS Lanka (PVT) Ltd. A/C No : 87979133 Branch : Kokuvil

மேலதிக விபரங்களுக்கு : 0777 123 330 / 011 44 77 488

APPLY NOW — அனுமதிகளுக்கு முந்துங்கள்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.